போன் நெ. 15. விலை 2 அணு. REGD No. 4642

திராவிடநாடு

ஆண்டு சந்தா ரூ. 7—0—0

மலர் 13 | 13—3—55 | இதழ் 36

நடமாடும் தமிழ்

தமிழ் உருவம்!-நாவலர் சோம சுந்தர பாரதியார் அவர்களுக்கு, பொன்னுடை போர்த்தி, தனது அன்புக் காணிக்கையைச் செலுத்திக் கொண்டிருக்கிறது, அண்ணுமலைப் பல்கலைக் கழகம், கடந்தபிப் 28-ந்தேதி. அண்மையில், தமிழ்ப் பெரியாரான இவருக்கு, "டாக்டர்" எனும் கௌரவப் பட்டம் அளிக்கப்பட்டதையும், மக்கள் அறிவார்கள். 'தமிழ்ச் சின்னங்களை'ப் போற்றவும் வாழ்த்தவும், முன்வந்துள்ள மக்களின் எழுச்சிக்கு, இது ஓர் அடையாளமாகும். இப்பெரியாரைப் போற்றியதன் மூலம், தமிழையும், தமிழ் எழுச்சியையும், பல்கலைக் கழகம் போற்றியிருக்கிறது. இதனுல், அதன் பெருமை அதிகமாகியிருக்கிறது! இந்த உணர்ச்சிக்குக் காரணமானவர்களை, நாம் பாராட்டுகிறேம். அவர்கள், ஆர்வம் வளர வேண்டுமென விரும்புகிறேம். 'தமிழ்' பாராட்டப்படுவது கண்டு மகிழ்ச்சியில் திளைத்தனராம், அ. நகர் மாணவர்கள். நாடும், ஆனந்தமே அடைகின்றது, செய்தி காண. நாமும் மகிழ்கிறேம்! நாவலர் வாழ்க! வாழ்க!!



★ ஒரு ★ முட்டாளின் கதை!

அவன் ஒரு முட்டாள்!

ஊர் சொல்லிற்று, இப்படி.

அவன் ஒரு முட்டாள்; ஏனென்ருல், அவன் படிக்கவில்லை.

'ஆமாம்! நான்படிக்காததால் முட்டாள்தான்' என்று மறுக்காது ஒப்புக் கொண்டான்.

படிக்காததுமட்டுமல்ல; உலகப் போக்கையே உணராதவன். ஏரும், கலப்பையும் தவிர ஏதும் தெரியாது.

"உண்மைதான்; எனக்கு எதுவும் தெரியாது" என்று மனதார ஏற்றுக் கொண்டான்.

*

"முட்டாள்!"

"முழு மூடம்!!"

"மக்கு! அசடு"

"மானம்போகிறது, என்னுடைய தம்பியென்று சொல்லிக்கொள்ள..."

"எனக்குந்தான் அண்ணு! உன்னைப்பற்றி யாராவது கேட்டால், சேனையிலிருக்கிருர் என்று பெருமையுடன் சொல்லமுடிகிறது. என்னைப் பற்றியும் 'வியாபாரி' என்றுஆனந்தத்துடன் அறிவிக்கமுடிகிறது. ஆனுல், நம்முடைய தம்பியைப்பற்றிச் சொல்லும்போது, 'அவன் ஒரு முட்டாளுங்க' என்று முடிக்கவேண்டி இருக்கிறது"

"முட்டாளா யிருந்தாலும், தம்பி! அவன் மெய் சோர உழைக்கிருன்..."

"நாம்மட்டும் உழைக்காமலா உண்கிறேம்? வீணன் அவன்; வியாபார பார முறையும் தெரியான்; உன்னைப் போல் வீரனுகவும் வழி அறியான். உடம்பைத் தேய்ப்பதைத் தவிர வேறேது வழி அவனுக்கு?"

*

"ஏய் முட்டாள்!"

"அண்ணு......"

"அப்பா உன்னைக் கூப்பிடுகிருர்"

"கழனி முழுவதையும் உழுதுவிட்டுப் பிறகு பார்ப்பதாகப் போய்ச் சொல்லு அண்ணு"

"பிறகு உழலாம்; வா, வா!"

"வரமுடியாது அண்ணு! எடுத்த வேலையை முடித்துவிட்டுத்தான் உங்கள் முட்டாள் தம்பி வருவான்"

*

"என்ன, எங்கே அவன்?"

"அந்த முட்டாள் இப்போது வர முடியாது என்கிருன், அப்பா..."

"ஏன்?"

"எடுத்த வேலையை முடித்துவிட்டுத் தான் வருவானும், முட்டாள்"

"முட்டாள்தான் அவன். சேனையிலிருக்கும் நீ கூப்பிட்டும், சேற்றிலிருந்து கரையேற விரும்பாது உழைக்கும் அவன் ஒரு முட்டாள்தான்..."

"என்னப்பா, என்னமோபோல் பேசுகிறீர்களே"

"இல்லைமகனே! உண்மையைச் சொன்னேன். மூத்தமகனுன நீயோ பெரிய வீரன்-போரில் புலி—ராஜதந்திரி. அரசுகளுக்கு வாழ்வு தரவும்; விரும்பினுல் மண்ணுக்கவும் முடியும் உன்னுல். உன்னுடைய இரண்டாவது தம்பியோ, நகரமே அஞ்சும் பெரிய வியாபாரி. தராசு இருக்கிறது

அவனிடம்; துப்பாக்கி இருக்கிறது உன்னிடம். காசு அவன் கையில்; அதிகாரம் உன் விரலசைவில். இவை ஏதும் இல்லாத உங்கள் கடைசித் தம்பி முட்டாளாக இருக்கிருன். அப்பன் பாட்டன் தேடிவைத்ததை உழுது அறுத்து, வீட்டுக்குக் கொண்டுவருகிருன்...பாரேன். நீங்கள் போய்க் கூப்பிட்டும்கூட, வேலையை முடித்துவிட்டு வருகிறேன், என்கிருன். இந்த முட்டாளுக்கு நீங்கள்தாம்பா பக்கபலமாயிருந்து உதவி ஒத்தாசை எல்லாம் புரியணும்...''

''அதெல்லாம் செய்யருேம் அப்பா! நாங்கள் வந்த வேலையை முடித்து சீக்கிரம் அனுப்புங்கள். வியாபார நேரம் இது கடையில். அண்ணனுக்கும், அரசரைச் சந்திக்கவேண்டிய நேரம் இது''

''அப்படியா....! சரி, இதற்கு அவன் என்ன வருவது? நான் சம்பாதித்த சொத்து! என் இஷ்டப்படி செய்தால், யார் என்னைக் கேட்கமுடியும் ?''

''யார் உங்களைக் கேட்கமுடியும், அப்பா?''

''அதனுலே, தம்பிகளே, இரண்டு பேரும் சுகமாகத் திரும்பிப்போய், உங்களுடைய வேலைகளைச் செய்யுங்கள். ஏதோ, ஒரு வழியிருக்கிறது உங்களுக்கு, வாழ. அவனே,முட்டாள்! மக்கு! மடையன்! அவனுக்கே எல்லா சொத்தும் இருக்கட்டும்.''

*

தந்தையின் தீர்ப்பு கேட்டுத் தவித்தனர், இருவரும்; ஏனெனில், அதிகச் சரக்கு வாங்கிப் போட்டு வியாபாரத்தை விஸ்தரிக்கவேண்டுமென்பதற்காக வந்தான் ஒரு மகன். இன்னொரு மகன், பணக்காரி ஒருத்தியை வீட்டுக்காரியாக்கிக்கொண்டதால், சேனையில் கிடைக்கும் சம்பளம் போதாமல், தன்பங்கை விற்றுப்போகலாமென வந்தான். தந்தையின் தீர்ப்போ, இப்படியிருக்கிறது! என்ன செய்வது? — என்று ஏங்கிக்கொண்டிருக்கும்போது, கழனி வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, வந்தான் தம்பி! அண்ணன்மார், வந்த விபரத்தை அறிந்ததும், அப்பாவிடம் வாதாடி, இருவருக்கும் சொத்துக்களைப் பங்கிட்டுக்கொடுக்கச் சொன்னுன். அண்ணன்மார்களிருவரும் வாங்கிக்கொண்டனர். வெளியில் சென்றதும், தங்கள் தம்பியைப்பற்றி, ''சுத்த முட்டாள்! இல்லாவிடில், அப்பா முடியாது என்று சொல்லியும், அவரிடம் சண்டைபோட்டு தனக்குச் சொந்தமான சொத்துக்களை இப்படி இழப்பானு?'' என்று இருவரும் மனதுக்குள் எண்ணுமலா, இருப்பார்கள்? நகர வாசிகளாயிற்றே! எண்ணினுர்கள்; ஆனுல், ஒருவருக்கொருவர், காட்டிக்கொள்ளவில்லை. தெரிந்தாலும், தெரியாததுபோலக் காட்டிக்கொள்வதுதானே, படித்தவர்களின் பண்பு! அதனுல்!!

*

'முட்டாள்' உழுது கழனியே கதியென்று கிடக்கிருன்.

'வீரன்' அரசர் படையில் தளபதி ஆகிவிட்டான்.

'வியாபாரி' நகரிலேயே பெரிய சீமானுகி விட்டான்.

★

என் தோழன் வீரனைப்பார்த்து, நீண்ட நாட்கள் ஆகிவிட்டது, எனக்கு! அதனுல் அவன் சொன்ன இந்த 'முட்டாள்' புராணத்தைச் சலிக்காது, கேட்டுக்கொண்டிருந்தேன்! இப்போதோ, கதை முடிந்துவிட்டது— கருத்தில்லாமல், கதை சொல்லும் வீணனல்ல, வீரன். எனவே, கேட்டேன்.

''வீரா எதற்காகப்பா, இந்தக் கதை. எங்கோ, ஆரம்பித்து எங்கோபோய் முடித்துவிட்டாயே......மூன்று அண்ணன் தம்பிகளைப்பற்றிய கதைக்கு இப்போது என்ன காரணம்?''

''காரணமின்றி, நான் எதையும் சொல்லமாட்டேன் தோழா! கடந்த சில நாட்களாகப் பத்திரிகைகளில் வரும் செய்திகளைப் பார்த்து வருகிருயோ'

''ஆந்திரத் தேர்தலைப் பற்றிக் கேட்கிருயா?''

''கேள்விக்குப் பதில்! பத்திரிகைகளைப் பார்க்கிருயா, நாள் விடாமல்.''

''என் தொழிலாயிற்றே, அது!''

''சரி! காசியில், சிலபேர் கூடி 'முட்டாள்கள் சங்கம்' வைத்ததாகவும், கல்கத்தாவில், 'முட்டாள்களின் மாநாடு' ஒன்றே நடந்ததாகவும் வந்த செய்திகளைப் பார்த்தாயா?''

''பார்த்தேன்!''

''அந்த செய்திகளைப்பற்றி, என்ன சொல்கிருய்!''

''என்ன இருக்கிறது சொல்ல!''

''சொல்ல என்ன இருக்கிறதா? தோழா! கல்கத்தாவிலும், காசியிலும் இருப்போர் வேடிக்கைக்காகக்கூட அப்படிச் சங்கங்கள் வைத்திருக்கலாம். ஆனுல், படித்தவர்கள், பண்டிதர்கள் என்று சொல்லப்படுகிறவர்களைவிட 'முட்டாள்'களே மேல், என்று எண்ணுகிறேன் நான். இதனுல், படிப்பையும் புதுமையையும் குறை சொல்லுகிறேன் என்று எண்ணுதே. அவைகள், சமூகத்தில், எல்லாருக்கும் கிடைக்கவில்லை! ஒரு சிலர்தான், அந்தப் பாக்கியத்தைப் பெறுகின்றனர்! அப்படிப் பெற்றவர்களால்உண்டாகும்,சண்டை

திராவிடம் பிரிந்தால்.....!

''திராவிடம் தனியாகப் பிரிந்துவிட்டால், நம் நாட்டிலிருந்து மத்திய சர்க்காருக்கு, இப்போது அனுப்பப்பட்டுவரும் 60 கோடி ரூபாய் நமக்கு மிச்சமாகும். நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் புகையிலையின்மேல் வரி விதித்து, 300 லட்சம் ரூபாய் வசூல் செய்து சர்க்காருக்கு அனுப்பிவிட்டு, அவர்களிடமிருந்து 22 லட்சம் ரூபாயை நமது பங்காகப் பெறவேண்டியதில்லை. நம் நாட்டுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வருமான வரித் தொகையை அப்படியே கொடுத்துவிட்டு 100 ரூபாய்க்கு 18 ரூபாய் வீதம் அவர்களிடமிருந்து திரும்பிப் பெறவேண்டிய நிலையும் நீங்கிவிடும். மத்திய சர்க்கரரிடமிருந்து நமக்கு யாதொரு உதவியும் வேண்டியிராது. புதிதாக யாதொரு வரியையும் விதிக்காமலும், முன்னமே விதித்துள்ள வரியின் விகிதத்தை உயர்த்தாமலும், பல திட்டங்களை வகுத்து, இப்போது தரிசாகக் கிடக்கும் 2 கோடி ஏகர் நிலங்களையும் பயிர் செய்யலாம். நம் நாட்டுக் கிராமங்களுக்கெல்லாம் உதவக்கூடிய அளவுக்கு மின்சாரத்தையும் பெருக்கிக்கொள்ளலாம். இவற்றிலிருந்து நமது வருமானமும் பெருகும்.

சட்ட ரீதியாக திராவிடம் பிரியுமானுல். இந்தியாவுக்கு விடுதலை அளிக்கப்பட்டபோது இருப்பாக இருந்த தொகை 325 கோடி ரூபாயிலும். இந்தியாவுக்கு, இங்கிலாந்தினிடமிருந்து சேரவேண்டிய இருப்புத் தொகை (Sterling Stocks) 700 கோடியிலும், நமக்கு ஆறிலொரு பங்கு சேரவேண்டும். ஏனெனில், நம நாட்டின் ஜனத்தொகை, இந்திய யூனியன் ஜனத்தொகையில் $\frac{1}{6}$ பாகம்.

அதோடு, இந்திய யூனியன் வசத்தில் இப்போது இருந்துவரும் ராணுவ ஸ்டோரிலும், போர்க் கப்பல்கள், ஆகாய விமானங்கள் ஆகியவற்றிலும் நமக்குப் பங்கு கொடுக்கப்படவேண்டும்'' ★

''திராவிடம் பிரிந்தால் வாழுமா?''
நூலில்
அ.கு. பாலசுந்தரன், பி.ஏ.எல்.டி.,

சச்சரவு சமாதான முழக்கம், ஆகியவைகளைவிட முட்டாளின் மௌனம் எவ்வளவோ மேல். ஒன்று நினைவிருக்கிறதா, உனக்கு?"

"என்ன?"

"உங்களைப்போன்ற பொதுப்பணியாளர்களையெல்லாம் 'முட்டாள்' என்று, உலகமே போற்றும் பண்டித நேரு ஏசி வீசிய ஞாபகம்"

"அதை மறக்கமுடியுமா?"

"முட்டாள்கள் என்று கேவலமாகச் சொன்னார். அந்தப் பெயரை, நற்காரியம் செய்வோர், தங்களுக்குச் சூட்டிக்கொண்டு, ஊர் வேலைகளில் ஈடுபடுகிறார்கள், கல்கத்தாவிலும் காசியிலும். நிர்வாணபுரியில், ஆடை உடுத்தியவனைப் பித்தன் என்று அழைத்தால், அவனுக்கென்ன! அந்த 'பித்தன்' என்கிற பெயரை வைத்துக்கொள்வதால், என்ன நஷ்டம்? ஒன்றும் இல்லையல்லவா! அதுபோலவே, காசி கல்கத்தா புதுமை விரும்பிகள்,

"நல்லது செய்வதே எம் பணி. அப்படி நல்லது செய்வதை இந்த சமூகத்திலிருப்போர் முட்டாள்தனம் என்று சொல்லுகிறார்கள். அது முட்டாள்தனம் என்றால்; நாங்கள் முட்டாள்கள்தான். அந்தப் பெயரைச் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுகிறோம். அதற்காக, நாங்கள் செய்கிற வேலையை விட்டுவிடமாட்டோம்," என்று 'முட்டாள் சங்கம்' நடத்த ஆரம்பித்திருக்கிறார்கள்......"

"வீரா! உன் விளக்கம், சரி. அதற்கும், தலைப்பிலே சொன்ன கதைக்கும் என்ன சம்பந்தம்?"

"என்ன சம்பந்தமா? காசி கல்கத்தாவிலிருப்போரைப் போன்ற, ஒரு முட்டாளை நான் பார்த்தேன்."

"நேரிலா?"

"புத்தகத்தில்! ரஷ்ய நாவலாசிரியர் டால்ஸ்டாய் எழுதிய, ஒரு நூலில். அதன் ஆரம்பத்தைத்தான் தலைப்பில், தந்தேன்."

"கதை, இன்னும் முடியவில்லையா!"

"ஆரம்பத்தைத்தானே, சொன்னேன். இப்போது, மீதிக் கதையையும் கேள். அதில், பொதிந்திருக்கும், கருத்துரை-சேனைகளுக்கென வாங்குகிற வரியில் பாதிப்பணத்தைக் கரியாக்கியும், வியாபாரிகளைக் கண்டால் விசேஷ கவுரவங்கள் அளித்தும், அதே நேரத்தில் விவசாயி என்றால் அலட்சியமும் வரிச்சுமையும் விதிக்கும் அரசுக்கு, மிகவும் தேவையான கருத்துரை. எழுதியவர், டால்ஸ்டாய். கற்பனை! எனவே, அவர் தரும் உருவங்களைப்பார் — உருவங்களை எண்ணாதே."

*

'பாகப் பிரிவினை' விஷயத்தில் சகோதரர்களுக்குள் எவ்வித சச்சரவும் ஏற்படாததை 'சாத்தான்' பார்த்தான்! தன்னுடைய குட்டி 'சாத்தான்'கள் மூன்று பேரை அழைத்து, "அந்த முட்டாள் பயலால், நமது காரியம் முறியடிக்கப்பட்டுவிட்டது. எப்படியாவது இவர்கள் மூவரையும் சண்டைபோடும்படி செய்யுங்கள்," என்று அனுப்பினான்.

முதல் 'சாத்தானின்' வேலை ஆரம்பமாயிற்று! தளபதியான அண்ணன், அரசனுடைய உத்தரவுப்படி, நாடு பிடிக்கும் ஆசைக்கு ஆளாகி, போர் தொடுத்துச் சென்றான். போருக்கு முதல் நாள் அவன் கொண்டுசென்ற பீரங்கி மருந்துகளின் மீது மழை பெய்ததால், நனைந்து எதற்கும் உபயோகமில்லாமல் போயிற்று. அதனால், தோற்றான்! படைகள் சின்னாபின்னமடைந்தன. இதைக் கண்ட அரசன், 'தளபதியே காரணம்' என்று சொல்லி கடுமையான தண்டனைகொடுத்து, சொத்துக்கள் எல்லாவற்றையும் பறிமுதல் செய்துகொண்டு, விரட்டிவிட்டான்.

இரண்டாவது சாத்தான், வியாபாரியின் மனதில் பேராசைகளைத் தூண்டிவிடவே, அவன் ஏராளமான சரக்குகளை வாங்கிக் குவித்தான். விலை இறங்கிற்று! விளைவு, பெருத்த நஷ்டமடைந்தான், அவன்.

'முட்டாளிடம்' சென்ற சாத்தான், அவனது வேலைக்கு குந்தகம் செய்ய பல வழிகளில் முனைந்தான்! 'முட்டாள் உழவன், 'முயற்சியே பெரிது' என நம்பியதால், சாத்தான் தோற்று, சாகவேண்டியதாயிற்று. அதைக் கண்ட, தளபதியிடம்சென்ற சாத்தான் வந்து, முட்டாளிடம் முயல, அதன் வால் அறுந்தது, ஏழை உழவனிடம்! "ஐயோ! என்னை விட்டுவிடு. உனக்கு ஒரு வித்தை காட்டுகிறேன்," என்று சொல்லி, வைக்கோல் தாள்களைக் கொண்டு, சேனை வீரர்களை உண்டாக்கும் வித்தையைச் சொல்லிக்கொடுத்து ஓடிவிட்டது. அந்த வீரர்களால்,என்ன பிரயோசனம் என்று தெரியவில்லை, ஏழை முட்டாளுக்கு! எல்லாரையும், இசைக் கருவிகள் ஏந்தி, கானம்பாடச் சொல்லிக் கேட்டுவிட்டு, பிறகு அவர்களை வைக்கோல் தாளாக மாற்றினான்!

வியாபாரியை வீழ்த்திய சாத்தானும் ஏழை முட்டாளிடம் வந்து, முயன்று தோற்றது. உயிர் போகும் தருவாயில், முட்டாளுக்கு அதுவும் ஒரு 'வரம்' கொடுத்தது. அதன்படி, மரத்திலுள்ள இலை தழைகளைக் கொண்டு, தங்கம் தங்கமாக மாற்றும் வித்தையைப் பெற்றான்! அந்தத் தங்கத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? சாப்பிட முடியுமா!—அதனால், அவனுக்கு, அதன் பிரயோசனம் எதுவும் விளங்கவில்லை. மறுபடியும் இலைதழைகளாகவே ஆக்கினான்!

கூனூர் உணவுச்சத்து ஆராய்ச்சி நிலையம்பற்றி, 11-7-52ல்பார்லிமெண்டு உறுப்பினர் தோழர் பேபி கந்தசாமி நமக்கு எழுதினார், "இந்த ஆராய்ச்சி நிலையத்தை ஐதராபாத்துக்கு மாற்றும் யோசனையைக் கண்டிக்க தமிழ்நாட்டு மெம்பர்கள் 9–7–52 அன்று சுகாதார மந்திரியைப் பேட்டி கண்டோம். எங்கள் கோரிக்கையைக் கேட்டு, பிறகு நிராகரித்துவிட்டார்" இத்துடன் அவர்கள் கொடுத்த மனுவின் விபரத்தையும் அவர் அனுப்பியிருந்தார்.

1952ல்! மூன்றாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சம்பவம் இது!!

பண்டித நேருவிடம்கூட இதுபற்றிய மகஜரைச் சமர்ப்பித்தனர்.

தென்னாட்டு உறுப்பினர்களில், பேபிபோன்ற நமது தோழர்கள்மட்டுமல்ல —தேசீயத் தோழர்களான **எஸ். வி. ராமசாமி, சி. ஆர். நரசிம்மன்** *(ஆச்சாரியார் மகன்)* **நாகப்ப செட்டியார், மரகதம் சந்திரசேகரன்** *(இப்போது டில்லி மந்திரி)* **பி. கக்கன்** *(இப்போது தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர்)* **எஸ். பாலசுப்பிரமணியம், பி. நடேசன்** *முதலிய பழுத்த காங்கிரஸ் தோழர்களும்* **என். சத்தியநாதன். ஏ. ஜயராமன்,** *பேபிபோன்ற நமது ஆதரவு பெற்றோரும் சென்று கேட்டனர்.*

கிடைத்தது என்ன? மறுப்புத்தான்!

*

தி. மு. க.'வின் 20ந் தேதிய ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்:

நீதி கேட்கும் தினம்

அக்கிரமத்தை விளக்கும் நாள்

தாயக வாழ்வுக்கு அடிகோலும் நாள்.

ஆகவே.

எல்லோரும் கலந்துகொண்டு

கண்டனக் குரல் எழுப்புங்கள்.

இது தவிர, தோற்றோடிய இன்னொரு சாத்தானால் நோயாளிகளைக் குணப் படுத்தும் வேர்களும் அவனிடம் கிடைத்தன.

வீராதி வீரனென்று பேர்பெற்று இப்போது விரட்டப்பட்ட முதல் அண்ணனும், சிறந்த வியாபாரியென்று ஊர்மெச்ச வாழ்ந்து இப்போது ஓட்டாண்டியாகிவிட்ட இரண்டாவது அண்ணனும், எங்குபோய் வாழ்வதென்று தெரியாமல் கடைசியில், 'முட்டாளே கதி,' என்று வந்தனர்.

அவர்களை, முட்டாள் ஆசையோடு வரவேற்றான்.

தான் குடிக்கும் கூழில், அவர்களுக்கும் பங்கு கொடுத்தான்.

தளபதியின் மனைவி, நகர வாசி—நாகரீக நங்கை. அவளுக்கு, முட்டாளின் அருகில் அமரவிருப்பமில்லை. "ஐயோ, நாதா! அவன் மீதிருந்து வீசும், வியர்வை நாற்றம் குடலை, பிடுங்குகிறது. அவனருகில் உட்கார்ந்து சாப்பிடமுடியாது," என்றாள்.

கணவன், உடனே முட்டாளிடம், "என் மனைவிக்கு உன் நாற்றம்பிடிக்கவில்லை. நீ கொஞ்சம் வெளியேபோய்ச் சாப்பிடு," என்றான்.

"ஆகா! அண்ணா! உன் இஷ்டம்" என்று சொல்லி, முட்டாள், மறு வார்த்தை பேசாமல், குதிரைக் கொட்டடியில்போய் வசிக்கலானான்.

வியாபாரியும், தனது மனைவியுடன், 'முட்டாளே கதி' என்று வந்தான். அவன் மனைவியும் "இந்தக் கோமாளியுடன் அமர்ந்து என்னால் சாப்பிட முடியாது" என்றாள். இரண்டாவது அண்ணனும், "ஏ! முட்டாள் தம்பி, எங்களருகில் வராமல் கொஞ்சம் ஒதுங்கியே இரு," என்று சொன்னான்.

இவன்தான் முட்டாளாயிற்றே! சரி! என்று போனான்!

*

அண்ணன்மாரிருவருக்கும், முட்டாளிடம் சிக்கியிருக்கும், இரண்டுவித்தைகளைப்பற்றித் தெரியவந்தது.

அதனால், "முட்டாளே! எனக்குக் கொஞ்சம் வீரர்களைத் தயார் செய்து கொடேன்!" என்றுகேட்க, முட்டாளும், தன் கொல்லையில் கிடந்த வைக்கோல் போரிலிருந்து ஏராளமான வீரர்களை உண்டாக்கித்தர, அதைக் கொண்டு, ஒரு அரசனைத் தோற்கடித்து, மூத்தவன் முடிசூட்டிக் கொண்டான்.

இரண்டாவது அண்ணனும், தம்பியைக் கெஞ்சி தங்கக்கட்டிகளைப் பெற்றுப் போய், பெரிய சீமானாகி விட்டான், நகரில்.

வீரர்கள், பெரியவனிடம்! பணம் சின்னவனிடம்!! என்ன செய்வது? சேனையைக் காப்பாற்ற பணம் வேண்டுமே! பணத்தைப் பாதுகாக்க சேனை வேண்டுமே!! — இரண்டு அண்ணன் தம்பிகளும், 'இன்னும் அதிகம் கேட்டு வாங்கி வருவதற்காக' முட்டாளிடம் போயினர்.

ஆனால், இத்தடவை, தங்கமோ வீரர்களோ தயாரித்து அளிக்க முடியாது என மறுத்துவிட்டான் முட்டாள்.

அவன் மறுத்ததைவிட, அவன் சொன்ன காரணம், விந்தையாயிருந்தது!

"பெரியண்ணா! வீரர்கள் எல்லாம் பாட்டுப் பாடுவார்களென்று உனக்குத் தந்தேன். ஆனால், அவர்கள், கிராமத்தில் ஒரு மனிதனைக் கொன்று விட்டனர். அவன் மனைவி, விதவையாகிவிட்டாள். விதவைகளையுண்டாக்கத்தானா, மாடுகளுக்குப் பிரயோசனப் படக்கூடிய, என் வைக்கோலையெல்லாம் தத்தம் செய்வது? என்னால் முடியாது!" என்றான்.

"சின்னண்ணா! தங்கக் கட்டிகளை வைத்துக்கொண்டு நீ விளையாடப் போகிறாய் என்று நினைத்தேன். ஆனால், அது, ஒரு பசுவைக்கொண்டு போய்விட்டது, கிராமத்துக்கு, உன் வேலையாள் வந்து, தங்கத்தைக் கொடுத்து பசுவைக் கொண்டுபோய் விட்டான். அதனால், மூன்று குழந்தைகள் பாலில்லாமல் கஷ்டப்படுகின்றன. என்னால், இந்தக் கோரத்தைச் சகிக்க முடியவில்லை. இனிமேல்; நான் தங்கம் உற்பத்தி செய்யமாட்டேன்" என்றான்.

படித்தவர்களான, இரண்டு புத்திசாலி; அண்ணன்மாருக்கும் எதுவும் புரியவில்லை. தம்பியோ' முட்டாளாயிருக்கிறானே—என்ற சஞ்சலத்தோடு திரும்பினர். கடைசியில், சேனையில் பாதியை பாதுகாப்புக்காகப் பெரியவன் தருவதென்றும், பணத்தில் பாதியை வீரர்களுக்காகச் சின்னவன் தருவதென்றும், முடிவு செய்து கொண்டு போயினர்.

இரண்டு 'புத்திசாலி'களும் இப்போது மன்னர்களாகிவிட்டனர். முட்டாளும்கூட, ஒரு தேசத்துக்கு ராஜாவாகிவிட்டான்! அண்ணன்மார்கள், பணம், வீரர்கள்மூலம், அரசர்களாயினர். இவனோ வியாதியை தீர்க்கும் வேர்மூலம், அரசனானான்! அந்த ஊர் அரசன் மகள், நீங்காப் பிணியால் அவதிப்பட்டாள். அதைத் தீர்த்து வைப்பவர்களுக்கு, மகளையும் அரசையும் கொடுப்பதாக அரசன் அறிவித்தான். அப்படியே செய்ததால், மன்னனுக்கு மருகனாகவும், தேசத்துக்கு அரசனாகவும் ஆனான்' முட்டாள்! சிறிது காலத்தில், மாமனாரும் இறந்து போகவே, இவன், அரசனானான்.

*

மூன்று சகோதரர்களும் அரசராயினர்! சேனைவீரனும், வியாபாரச் சீமானும், தத்தமது நாட்டில் சட்டங்களையும், வரி வசூல் ஏற்பாடுகளையும் வகுத்துக் கொண்டு அரசு புரிந்தனர்!! நமது முட்டாளோ, மாமனார் இறந்த பின், மனைவியையும் அழைத்துக் கொண்டு வயலை நோக்கிப் புறப்பட்டான், "செச்சே! இதென்ன ராஜா வேலை. சோம்பேறி வேலை. உடல் பருத்து, பசியும் தூக்கமும் கூட இல்லாமல் போய்விட்டது" என்று சொல்லியபடி.

மக்கள், ஓடிவந்தனர்.

"மன்னா ஈது அடுக்குமோ? மன்னர் போய் ஏர் உழலாமா?"

"மன்னன் என்பதால், வயிறு பசிக்காமலா இருக்கிறது. அவனும், சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும்!"

"வரி போட்டு, பணம் பெற்றால், தாங்கள் சுகமாகயிருக்கலாமே?"

"வரி, என்றால் என்ன? எதற்காகப் பணம்?"

"எதற்காகவா? நமது ரதகஜதுரக பதாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் சம்பளம் கொடுக்கப் பணம் வேண்டாமா?"

"அதற்காக, எல்லாரிடமும், வாங்கி இவர்களுக்குக் கொடுக்கச் சொல்கிறாயா? வேண்டாம்! பணமில்லாவிட்டால், சம்பளத்தை நிறுத்திவிடு!"

"அப்போது, அரசாங்க ஊழியத்துக்கு ஆளே அகப்படமாட்டார்கள்."

"பரவாயில்லை! உத்தியோகம் பார்க்காவிடில் உழைக்க நேரமிருக்கும்; ஊரில் கிடக்கும் எருவைக்கொண்டு போய், வயலில் போடட்டும். ஊரும் சுத்தமாகும்! வயலும் விளையும்!"

அவனுக்கு எப்படி இதையெல்லாம் விளங்கும்படி செய்வதென்று ஒருவருக்கும் புரியவில்லை; அவன்தான், முட்டாளாயிற்றே!

*

"மகாராஜா! அவன், என் வீட்டில் திருடிவிட்டான்."

"அதனாலென்ன! அவனிடம், இல்லை. உன்னிடம் இருந்திருக்கிறது. எடுத்துக்கொண்டான்."

*

"மன்னவா! உங்களை முட்டாள் என்று ஊரார் சொல்லுகிறார்கள்"

"அதனாலென்ன!"

*

இப்படிப்பட்ட அரசன் ராஜ்யத்தில் யார் இருப்பார்கள்? புத்திசாலிகளெல்லாம் போய்விட்டனர்! முட்டாள்கள் மட்டும் இருந்தனர்! அரசனைப் போலவே அவர்களும், உழைத்து உண்டு வாழ்ந்தனர்.

மூன்று குட்டிச்சாத்தான்களை அனுப்பிய, பெரிய சாத்தானுக்கு எந்த விபரமும் கிடைக்கவில்லை! அதனால், அதுவே நோகவந்தது—மூன்று அரசுகளையும் பார்த்தது!! முதலில், மூத்தவனிடம் போயிற்று. அவன் படையில், சேனாதிபதியாகச் சேர்ந்து நாடு பிடிக்கும் ஆசையைத் தூண்டியது. ஆயுதங்களை உற்பத்திசெய்து, அவனை, பக்கத்து நாட்டுப் பெரிய அரசனிடம் போருக்கு அனுப்பியது. பேரரசன், சுலபத்தில்,இவனைத்தோற்கடித்தான்! ராஜ்யத்தையும் பிடுங்கிக்கொண்டான்! உயிர் தப்பினால் போதும் என்கிற கதியாயிற்று, மூத்த அண்ணன், முடிவு.

சாத்தான், வியாபாரச் சீமான் ராஜ்யத்துக்குப்போய், வியாபாரிபோல ஒரு தொழிலை ஆரம்பித்து, எந்தப் பண்டமானாலும் அதிகவிலை கொடுத்து வாங்கினான். இதனால், தங்களிடம் கிடைக்கும் பொருள்களையெல்லாம் அவனிடம் கொண்டுவந்து கொடுத்து, ஏராளமான பணத்தைப் பெற்றுக்கொண்டு போயினர், மக்கள்.

இதனால், மக்களிடம் பணப்புழக்கம் அதிகமாயிற்று. வியாபாரியான மன்னனுக்கு ஆனந்தம் தாங்கமுடியவில்லை. வரிமேல் வரிபோட்டு, மக்களிடமிருந்து பணத்தைக் கறந்தான். மக்களும், பணம் அதிகம் இருந்ததால் தட்டாமல் செலுத்தினர். பணம் இருந்ததேயொழிய, மன்னனுக்கு வரவரக் கலக்கம் அதிகமாயிற்று. ஏனென்றால், பணம் இருந்ததேயொழிய அதைக் கொண்டு தனக்குத் தேவையான எந்தப் பொருளையும் அடையமுடியவில்லை, அவனால். உணவு–உடை முதலியவைகளுக்குக்கூட திண்டாட்டம் வந்தது. ஏனென்றால், அவைகளையெல்லாம் அரசன் எவ்வளவு பணங் கொடுப்பதாகச் சொல்லுகிறானோ, அதைவிட அதிகமான பணம் கொடுத்து சாத்தான் வாங்கி விடுகிறது. என்ன செய்வது? சகிக்கமுடியாத வியாபாரக் கோமான், அவனை, நாட்டுக்கு அப்பால் விரட்டினான். சாத்தான் போகவில்லை; எல்லையில் கடை வைத்துக் கொண்டு, முன்போலவே வியாபாரம் செய்தது. மக்களும் அதிக லாபம் விரும்பி அவனிடமே சென்றனர். வியாபாரி சாத்தான், அரசனையே பணங் கொடுத்து வாங்கிவிடப் போவதாக மக்கள் பேசலாயினர். இதைக் கேட்ட மன்னனுக்கு ஒன்றும் புரியவில்லை. அழுதான்-உருண்டான்-திகைத்தான்.-திக்குமுக்காடினான்.

இந்தச் சமயத்தில், போரில் தோற்ற முத்தவன், தம்பியிடம் வந்தான்.

“அண்ணா! உனக்கு நாடு இல்லை. எனக்கோ, நாடு இருந்தும் பிரயோசனமில்லை. இப்படியாயிற்றே நம் கதி” என்று இருவரும் அழுதனர்.

சாத்தான், சிரித்துக்கொண்டு, முட்டாள் ராஜ்யத்துக்குப் புறப்பட்டது, சேனாதிபதி உருவில்.

*

“அரசே! ராஜா என்றால், சேனை வேண்டாமா? உத்தரவு கொடுங்கள். ஒரு சேனையைத் திரட்டுகிறேன்” என்றது, சாத்தான்.

“சரி, திரட்டி, பாடக் கற்றுக்கொடு” என்றான், முட்டாள்.

மக்களோ, சேனையில் சேர விரும்பவில்லை! சாத்தான், ‘சம்பளம் நிறையக் கிடைக்கும்,’ என்றான். ‘போப்பா,உன் சம்பளம் யாருக்குவேண்டும். எங்களுக்குத் தேவையானதெல்லாம் இருக்கிறது,’ என்றனர்.

சாத்தான், பயமுறுத்தினான்! சேராவிடில் அரசர் கொன்றுவிடுவார் என்று அறிவித்தான்.

மக்கள் மன்னனிடம் போய்ச் சொல்லினர்—“அரசே! சேனையில் சேராவிடில் நீங்கள் எங்களைக் கொன்றுவிடுவீர்களாமே!”

முட்டாளுக்கு புரியவில்லை, “நான் ஒருவனே உங்களை எப்படிகொல்லமுடியும். நான் முட்டாளாயில்லாவிட்டால் இதை உங்களுக்கு விளக்கிச் சொல்லுவேன். என்ன செய்வது! எனக்கே புரியவில்லை,” என்றான். மக்கள், போய்விட்டனர்.

சாத்தான், திகைத்தது!

அதனால் வேறு வழியில் சென்று, இன்னொரு மன்னனைத் தூண்டிற்று. அவன், முட்டாள் ராஜ்யத்தின்மீது, படையெடுத்தான் — யானை, குதிரை, வீரர்கள், பீரங்கிகளோடு!

முட்டாள் ராஜ்யத்து மக்களோ, அவைகளைக் கண்டதும், ஓடிவந்து வேடிக்கையாகப் பார்த்தனர். ஒருவராவது எதிர்க்கவில்லை.

எதிரிகள், தானியங்களையும், ஆடு மாடுகளையும் கைப்பற்றினர்; முட்டாள் மக்கள், அவர்களுக்கு வேண்டியதை அள்ளிக்கொடுத்தனரேயன்றி, மறுக்கவில்லை. அதோடு, “ஐயோ பாவம்! உங்கள் தேசத்திலே, இதெலலாம் கிடைக்கவில்லையென்றால், எங்களோடு வந்து இருங்களேன்!,” என்று சொல்லினர்.

எப்படியிருக்கும்சூராதிசூரர்களுக்கு? சோர்ந்து போயினர்; தமது மன்னனிடம் போய், ‘அரசே, இதற்கா எங்களை அழைத்து வந்தீர்?’ என்று பேசலாயினர்.

அவன் கோபம்கொண்டு, முட்டாள் மக்களின் வீடுகளையும், தானியக் கிடங்குகளையும் தீவைத்து கொளுத்தச் செய்தான். அதைக் கண்ட முட்டாள் மக்கள், “ஏனையா,இப்படி பண்டங்களை அழிக்கிறீர்கள்? வேண்டுமானால் நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள்,” என்று ஓவென அழுதனர்.

வீரர்களால், இந்தப் பரிதாபத்தைத் தாங்கமுடியவில்லை. அவர்களும் அழுதுவிட்டு, பேசாமல் திரும்பினார்கள்.

தோற்ற சாத்தான். வேறு வழியுண்டா, என யோசித்தான்.

*

ஒரு கனவான்போல் வேஷம் போட்டுக்கொண்டுபோய், முட்டாள் ராஜ்யத்து மக்களிடம், ஏராளமான தங்கங்களைக் காட்டி, பண்டங்களை விலைக்கு வாங்கினான்.

அவர்கள் பண்டங்களைக்கொடுத்து வாங்கிய தங்கத்தை, நகைகளாக்கவில்லை! குழந்தைகளிடம் விளையாடக் கொடுத்தனர்!

இதைக்கண்ட சாத்தானுக்கு எதுவும் புரியவில்லை. சின்னாட்களில், யாரும் தங்கம் வாங்க வராததால், சாப்பிட பண்டம் எதுவுமின்றி, பட்டினியாய்க் கிடக்கலானான். இதைக் கண்ட முட்டாள் ஜனங்கள் பரிதாபப்பட்டு, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டிலும் சாப்பாடுபோடலாம் என்று முடிவு செய்தனர்.

அதனால், சாத்தான், தினசரி ஒவ்வொரு வீட்டுக்கும் போக ஆரம்பித்தான். முதல்நாளே தோல்வி. ஒரு வீட்டு எஜமானி மறுத்துவிட்டாள் “கரடுமுரடான கையில்லாதவர்களுக்கு நாங்கள் சாப்பாடு போடமாட்டோம். வேண்டுமானால் காத்திரு. இலையில் மிஞ்சியதைச் சாப்பிடலாம். உழைக்காமல் சாப்பிடுகிற ஆளா நீ?” என்று சொல்லவே, சாத்தானுக்குக் கோபம் கோபமாய் வந்தது.

“ஏ, மூடராஜா! உழைப்பது என்றால், கைகளால் வேலை செய்வதுமட்டுமா? புத்திசாலிகள், எதனால் வேலை செய்கிறார்கள் தெரியுமா?” என்று முட்டாளிடம்போய் சண்டை போட்டது.

“நான்தான் முட்டாளாயிற்றே எனக்கு எப்படித் தெரியும்?” என்று அவன் சொல்ல, சாத்தான் சொன்னான், “ஏ முட்டாள்! தலையிலுள்ள மூளையால் வேலை செய்வது மிகவும் கஷ்டம். வேண்டுமானால், உனது குடிபடைகளுக்குச் சொல்லித்தருகிறேன், சம்மதமா?” என்றது.

“முட்டாளும், சாத்தான் சொல்லிக் கொடுப்பதை, எல்லோரும் கற்றுக் கொள்ளவேண்டுமென உத்தரவு போட்டான்.

சாத்தான், உயரமான கோபுரம் ஒன்றில், ஏறினான். மக்கள் ‘தலையால் வேலை செய்வதை’க் காணக்கூடினர்!

கனவான உருவிலிருந்த சாத்தான் வேலை செய்யாமல் பிழைக்கும் வழி பற்றி, ஏதேதோ பேச ஆரம்பித்தான்.

(12-பக்கம் பார்க்க)

வாழ்வு பெற, வழி!

லாலாலஜபதிராய்

பஞ்சாப் சிங்கம் என்று பாராட்டப் பெற்றவர்! மறைந்துபோன காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர்!!

அந்தக்கால சுதந்திரத் தலைவர்களில், அவருக்கொரு, சிறப்பான இடம் உண்டு.

அவர் ஒரு முறை சென்னைக்கு வந்து பார்த்து, சிந்திய கண்ணீரின், சித்திரம் இது.

அப்போது, திராவிடரியக்கம் இருக்கவில்லை! 'ஜஸ்டிஸ் கட்சி', இருந்தது!! அதுபற்றி, அவர் எழுதப் புகுந்ததே, இந்தக்கட்டுரை.

கடந்தவாரம் சென்னை இளைஞர் சங்கம் ஒன்றின் சார்பில் மயிலையில் பேசிய அன்பர் ஆச்சாரியார், பார்ப்பன இளைஞர்களைப்பார்த்து, ஆரிய—திராவிடப் பிரச்னைக்கு நீங்கள் ஒரு முடிவு கண்டாகவேண்டும், என்றாராம்!

ஆட்சியில் இல்லாததால், 'கணக்குத்தீருங்கள்,' என்றுசொல்லாமல், சண்டை ஏற்படாத வகையில் ஒரு முடிவுகாணச் சொல்லியிருக்கிறார்.

முடிவு காணப்படவேண்டிய விஷயம்தான், அது! ஆனால், அதே கூட்டத்தில் பழைய ஆதாரங்களையும், பக்திகொண்டு ஒழுகுவது பற்றியும், வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்.

பழைய ஆசாரங்களே, நமது வேற்றுமைகளுக்குக் காரணம் என்பது, அறிஞர்கள் முடிவு. அதனாலேயே, பார்ப்பனீயம் இன்னும், வாழுகிறது! அந்த ஆசார முறைகளின் அடிப்படையில்தான், இந்து மதம், வாழ்கிறது.

நாட்டில் நன்மை மலரவேண்டுமெனச் சொல்லும் ஆச்சாரியார், சச்சிவோத்தமர், 'சர்' பட்டம் பெற்றோர் எல்லாம், அந்த ஆசாரமுறைகளைப்பற்றிப் பேசும்போது, உலகத்துக்கே உய்வு காட்டும் வழி உண்டு என்று போற்றத் தவறவில்லை.

அனுகுண்டு தடை வரையில், அதே வாயால், பேசவும் அஞ்சுவதில்லை.

தீயிருந்தால், தென்றல் எப்படி வீசும்?—அதைத்தான், நாம் கேட்கிறோம். லஜபதியும், இக்கட்டுரையில், குறிப்பிடுகிறார்.

வேற்றுமை ஒழிய, ஆச்சாரியார் போன்றோரின், சனாதனப் பித்து ஒழியவேண்டும்! தாயகத்தைச் சாய்த்துவரும் பாம்பு அது!

எங்கேயிருக்கிறது, சனாதனம்?—என்று கேட்கலாம்.

பேச்சில்! நடையில்! உடையில்! வாழ்க்கை முறையில்! — நன்றாக விளங்கும், அது.

அந்த 'ஆரியம்' அழியவேண்டும் — ஆச்சாரியார் கூறுவதுபோல, நிறத்திலே அல்ல! மனதிலே இருக்கிறது!—அது, ஒழியவேண்டும்.

அன்று முதல் நாம் சொல்லி வரும் கருத்து, இது.

அதை, அப்போது, புரிந்து கொண்டவர்களில ஒருவர் லாலா லஜபதிராய்.

அவர், தீட்டியது, இது:—

*

'வட இந்தியாவில் இந்துமுஸ்லிம் கலவரங்களால் எப்படி மக்கள்பிரிவுபட்டுத் தொந்தரவுபட்டு வருகின்றார்களோ, அதுபோலவே சென்னையில் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதாரென்னும் சச்சரவால் பெரிதும தொந்தரவேற்பட்டிருக்கிறது.

புராணகாலத்தில் பெரியோர்களாகிய சங்கரர், மத்துவர், ராமானுஜர் ஆகிய மூவரும் சென்னையில் பிறந்தவர்கள். இச்சென்னை மாகாணம் அப்பெரியோர்களால் கற்பிக்கப்பட்ட இந்து நாகரீகத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லப்படுவது. ஆனால், நான் இச்சென்னையைப் பார்த்தவரையில் இந்து மதத்தின் பேரால் எந்தெந்த நடவடிக்கைகள் பழக்கவழக்கத்திலும் அமுலிலும் இருந்து வருகிறதாக அறிகிறேனோ அவைகள் ஒருக்காலமும் நம்மை சுயராச்சியத்திற்குச் செலுத்திக் கொண்டு போகமுடியாதென்று நிச்சயமாய்ச்சொல்லுவேன்.

சென்னையில்வேதாந்தமும் இந்து தத்துவ சாஸ்திரமும் வெகுஉயர்ந்த நிலையிலிருக்கின்றன. ஆனால்அவற்றின் பிரயோகமும் பிரத்தியட்ச வாழ்வும் மிகமிக இழிவான நிலைமைக்குப் போய்விட்டன.

சென்னையிலிருக்கும் கோவில்களின் கட்டட நிர்மாணங்களெல்லாம் ஆகமத்தின்படி மேலானவைகளாயிருந்தபோதிலும், நடவடிக்கையில் முழுதும் ஆபாசங்கள் நிறைந்தஅடைப்புகளாகவே இருக்கின்றன. அவைகளில் நாலாபக்கங்களிலும் அநாச்சாரமும், அநாகரீகமுமான வாழ்வே காணப்படுகின்றன. சென்னைவாசிகளின் ஆங்கிலப்படிப்பானது அவர்களுடைய மேற்கண்ட கோட்பாடுகளையும், பழக்கவழக்கங்களையும் கொஞ்சமும் திருத்த முடியவேயில்லை. அன்றியும் இவர்களுடைய வகுப்புச் சண்டையும், ஒருவரையொருவர் அளவு கடந்து வெறுப்பதையும் பார்த்து மிகவும் துக்கமுண்டாகிறது.

சென்னை இந்துக்களை மூன்று பிரிவாகப்பிரிக்கலாம். அவையாவன:- பிராமணர்கள், பிராமணரல்லாதார்கள், தீண்டாதார்கள். சமீபகாலம்வரையில் இந்த ராஜதானியின் இராச்சியாதிகாரங்கள் முழுவதையும் பிராமணர்கள் கைப்பற்றி இருந்து வந்ததாகத் தெரிகின்றது. அந்நிலைமையிலேற்பட்ட அதிருப்தியின் காரணமாகப் பிராமணரல்லாதாரில் ஒரு கட்சியார் 'பிராமணரல்லாதார்' இயக்கத்தை ஆரம்பித்தார்கள். பிராமணர்களும், பிராமணரல்லாதாரர்களும் ஒருவரையொருவர் எதிர்ப்பதற்காகவே இரு கட்சிகளாகப்பிரிந்து கொண்டார்கள் என்றுசொல்லலாம். ஆனாலும், இரு வகுப்பாரும் ஒருவரையொருவர் பொதுவாகவே எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற சிலகாலம்வரை காங்கிரசில் பிராமணாதிக்கம் இருந்தது.

*

சென்னை காங்கிரஸ்தலைவர்களுக்குள்ளாகவே இன்னமும் குருட்டு நம்பிக்கை இருந்துவருகிறதுமல்லாமல் இந்து புராணங்களில் கற்பிக்கப்பட்ட எல்லா வேற்றுமைப்பாடுகளும் அவர்கள் உள்ளத்தில் இன்னமும் நிறைந்திருக்கின்றன. ஆதலால் அவர்கள் தங்கள் சமூக வாழ்க்கையைச் சீர்திருத்தும் பொருட்டாக ஒரு வேலையும் செய்வதே இல்லை.

எல்லாவற்றிலும் இழிவான நிலை மலையாளத்தில் தீண்டாதார்களுடையது. நான்மலையாளத்தில் தீண்டாதார்களின் நிலையை அறிவதற்குச் சென்றேன். அவர்களின் நிலைமையையும், தீண்டாமையை

ஒழிக்க வேண்டிய அவசியத்தையும் அவ்வேலையிலிருக்கும் கஷடத்தையும் நோக்கிமிகமிகத் துக்கித்தேன்.

எந்த மக்கள் சமூக சீர்திருத்தமில்லாமல், அரசியல் சுதந்திர இயக்கம் நடத்துகின்றார்களோ அவர்கள் நாட்டின் உண்மை நிலையை அறியவில்லை என்பதுதான் என் ஆழ்ந்த கருத்து. எதுவரைக்கும் அவர்கள் உண்மையாகக்கபடமற்று ஹிந்து கூட்டத்தின் ஆசாரப் புரட்சிகளை மாற்றுவதற்கு முயற்சி செய்யவில்லையோ அதுவரைக்கும விடுதலை கிடையாது என்பது ஒருக்காலும் முடியாதகாரியம் என்பேன். நான் எப்பொழுதும் இந்த அபிப்பிராயமுடையவனாயிருந்த போதிலும் சென்னையில் நிலைமையைப் பார்த்த பிறகு இந்தஎண்ணம் முற்றிலும் உறுதிப்பட்டுவிட்டது. அன்றியும் சென்னையில் இதுவரையில் ஆசாரச் சீர்திருத்த விஷயமாக ஒரு காரியமும் செய்யப்படவில்லை என்றே சொல்லுவேன். அங்கே சில கனவான்கள் பிரார்த்தனை சமாஜத்தினுடையவும் பிரம்ம ஞான சபை (தியோசாபிகல் சொசைட்டி)யினுடையவும் நோக்கங்களைக் கொண்டு ஆசாரச் சீர்திருத்தத்திலீடுபட்டிருக்கிறார்கள். ஆனால், படிப்புள்ள மக்கள் கூட ஆசாரச் சீர்திருத்தத்தை மத விரோதமென்றும், அனுவசியமென்றும் கருதுகிறார்கள்.

*

இத்தடவையிலும் சென்னை மாகாணத்தில் ஸ்ரீரங்கத்திலுள்ள பெரிய வைணவக் கோவிலைப்பார்த்தேன். இக்கோவிலில் ஸ்ரீ ரங்கநாதரின் பூஜை நடக்கிறது. இராமானுஜ ஆசாரியாரின் விசிஷ்டாத்வைத முறைப்படி இங்கே தெய்வவழிபாடு நடக்கிறதென்று சொல்லுகிறார்கள். ஆனால், (என்னை மன்னிக்க வேண்டும்) நான் அந்தக் கோவிலைச் சுற்றியுள்ள எல்லா விஷயங்களையும் கண்ணுற்று மிகவும் வெறுப்படைந்தேன். வெகு நேரம் வரை ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கிவிட்டேன். எனக்கு அந்தக் கோவிலில் மனிதத் தன்மைக்கு ஏற்ற ஒரு விஷயமும்புலப்படவில்லை. அவ்விடத்தில் நடக்கும் துராசாரங்கள் மனிதன் சகிக்கக்கூடியதல்ல. பொட்டுகளையும் பட்டை நாமங்களையும் தீட்டிய நெற்றியுடைய பெரியபெரிய ஆங்கிலங்கற்ற பண்டிதர்களுடைய சம்பாஷணையைக் கேட்டதிலிருந்து வெறும்புத்தகங்களை வாசித்தலால் மட்டும் மனிதனுக்கு அறிவு ஏற்பட்டு விடாது என்று நிர்ணயம் செய்து கொண்டேன். நான் ஏதோ ஒரு மதத்தைப் பிரச்சாரம் செய்கிறவனல்ல. நான் எல்லா மதங்களினாலும் துக்கமடைந்து மதக்கட்டுப்பாடுகளிலிருந்து விலகிக்கொண்டவன். ஆனால் எது மனிதனுக்கு நன்மை பயக்குமென்றும் எது நன்மை பயக்காதென்றும் தெரிவதற்குப் போதிய அறிவும் சக்தியும் என்னிடமிருக்கிறது. சென்னை மாகாணத்தில் உள்ள கோவில்களுடைய பூஜை முதலிய நடைமுறை நம்மை சமூக விழ்ச்சி நரகத்திற்கே கூட்டிச் செல்லுகிறதென்பது எனக்கு நன்றாய்ப் புலப்பட்டுவிட்டது. எந்தெந்தக் கோவில்களில் தெய்வவழிபாட்டின் பெயரால் துராசாரம் நடக்கிறதோ, எங்கே இதுவரையிலும் மக்கள் விபசாரத் தொழிலைக் கோவில்களின் வழிபாட்டின் ஒரு முக்கியமாகக் கருதுகின்றனரோ, எந்த மக்கள் சமூகத்தில் நாளிதுவரை யாராவதொருவருடைய கடவுள் பக்தியைத் தெரிவிப்பதற்கு நெற்றியில் நாமம் முதலிய குறிகள் நீண்டோ அக்ண்டோ வட்டவடிவமாகவோ இருக்கவேண்டியது அவசியமென்றும் கருதப்படுகின்றதோ அந்த மக்கள் சமூகத்தில் அரசியல் சுதந்திரத்தைப் பரவச்செய்வது ஒருக்காலமும் முடியாத காரியம். மத சம்பந்தமாகவோ மற்றும் வேறு எது சம்மந்தமாகவானாலும் சுதந்திரப் பிரச்சாரம் செய்ய முற்பட்டால் அதில் முதலாவதாக மனித சுதந்திரம் கொஞ்சமாவது வெளிப்பட வேண்டும். எந்த மதத்தில் பகுத்தறிவோடு யோசனை செய்யும் மனோபாவத்திற்கு இடம் சற்றேனும் இல்லையோ அதில் இராஜீய சுதந்திர நோக்கத்தைப் புகுத்தல் அசாத்தியமில்லாவிட்டாலும் நிச்சயமாகச் சுலபத்தில் சாத்தியமாகக் கூடிய காரியம் அல்ல என்றே சொல்லுவேன்.

நமது சென்னை சகோதரர்கள் பெரிய ஜாலவித்தைக்காரர்கள். வாய்க்கணக்கில் பெயர் படைத்தவர்கள். வேதாந்தம் பேசுவதிலோ இணையற்றவர்கள். எழுதுவதிலும், பேசுவதிலும் மகா மேதாவிகள். ஆனால் செய்கையிலும் மத விஷயத்திலும் அவர்களுடைய நடவடிக்கை கீழ்க்கண்ட இரண்டில் ஒன்றாகத்தானிருக்கவேண்டும். அதாவது அவர்களுடைய புத்தி அத்துறையில் செல்லவேவிடாதவர்கள். அல்லது மிகவும் கொடிய வஞ்சகர்களாக இருக்க வேண்டும்.

அடிமைத்தனம் வஞ்சகத்தின் தாயகமாகும். எங்கே மதத்தின் கொள்கைகளின்படி வெளிவேஷத்தையே முக்கியமாகக் கொள்ளப்படுகிறதோ அங்கே முதலில் புத்தியின் அடிமைத்தனமும், பிறகு சரீரத்தினடிமைத்தனமும் உண்டாகி ஒரே வாழ்வில் மேற்படி இரண்டு ரூபங்களும் ஏற்படுகின்றன. சென்னையின் மதத்தின் நிலைமையையும் சமூகத்தின் நிலைமையையும் பார்த்து சென்னைக்கு சீர்திருத்தம் அவசியமிருக்கிறதென்று எனக்கு எண்ணமுண்டாயிற்று. சென்னையைப் போலொத்த குருட்டு நம்பிக்கை கொண்ட இந்து மகாணத்தை சீர்திருத்தத்திற்கு கொண்டுவருவதென்பது ஆரிய சமாஜிகளால்கூட முடியாது என்பதாகத் தோன்றுகின்றது. நாளிதுவரை ஏற்பட்ட சீர்திருத்த ஸ்தாபனமாகிய பெரிய கப்பல்களெல்லாம் சென்னை என்கின்ற பாறையில் மோதி உடைபட்டு மூழ்கிவிட்டதாகவே தெரியவருகிறது. மதராஸில் சந்தோஷகரமான வேலை எதுவும் செய்யமுடியவில்லை. சென்னையில் கரைகண்டபயமற்ற சீர்திருத்தக்காரர்களின் தேவை இருக்கிறது.

இதுவரையிலும் சென்னையில் ஆரிய சமாஜத்தைப் பரப்புவதற்கு எவ்வளவு முயற்சி செய்யப்பட்டதோ அவ்வளவுக்குப் போதிய பலன் கிடைக்கவில்லை. அவ்விடத்திய சமய சமூக நிலைமை விஷக்காற்று சூழ்ந்ததாயிருக்கின்றது. மிகக் குறுகிய நோக்கமுடையதாயிருக்கின்றது. இந்நிலைமையில் இம்மாகாணத்தில் கொஞ்சமாவது காரிய சித்தியடைவதற்குத்தக்க யோக்கியதையுடைய ஒரு தீரன் வேண்டும்.

★

சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

மானேஜர்.

திராவிடநாடு

காஞ்சி] 13—3—55 [ஞாயிறு

எதிர்பார்த்தது!

★

அச்சம் ஒரு பக்கமும், ஆவல் இன்னொரு பக்கமும் அலைமோத, 'இரண்டு இடத்தில் நிற்போம்; ஒன்றிலாவது ஜெயிக்கமாட்டோமா?' என்று, தேர்தலில் குதித்த ஆந்திர காங்கிரஸ் தலைவர் தோழர் கோபால ரெட்டி, அரசுக் கொலுவில் அமரப்போகிறாராம்.

அவரைப்போலவே, சந்தேகம் சமர்புரியும் உள்ளத்தோடு, தேர்தலில் நின்ற பலர், வெற்றிபெற்று வீரக்குரல் எழுப்புகின்றனர், ஆந்திரத்தில். டில்லியே திகைத்ததாம்—தித்திப்புச் செய்திகள் குவிவது கண்டு! டில்லிமட்டுமல்ல, ஆந்திரத்தின் முடிவுகளை, அமெரிக்க ஏடுகள்கூட அதிசிரத்தையுடன் கூர்ந்து கவனித்து, 'கொட்டட முரசு' என்று கூத்தாடத் துவங்கினராம்!

தேர்தல் முடிவை அறிவிக்க வந்த சென்னை ஏடு, 'இந்து' செப்புகிறது, அமெரிக்கருக்கு, ஆந்திரத் தேர்தலின் முடிவு, இந்தியாவின் எதிர்காலம்பற்றி இன்பக் கனவுகளை எழுப்பியிருப்பதாக. கடனும் பண உதவியும், இனி ஏராளமாக—தாராளமான வழிகளில், 'ஐசன் ஆட்சி'யிலிருந்து ஓடிவருமாம், இங்கு!

இன்பக் கனவுகள் பல! எதிர்பார்க்காத அளவுக்குக் கிடைத்துவிட்ட வெற்றியின் விளைவாக!! இங்குமட்டுமல்ல; அகில உலகிலும்.

ஆந்திரத்தில் நடைபெற்ற இந்தத் தேர்தல் உலகக் கவனத்தைக் கவர்ந்ததற்குக் காரணம், கடந்துபோன பொதுத் தேர்தலில், கம்யூனிஸ்டுகள் பெற்றுக் காட்டிய வெற்றிகளாகும்.

இன்று ஆனந்தம் வழியும் இதே கண்களில், மூன்றாண்டுகளுக்கு முன்பு கலக்கம் ததும்பியது. கோபாலர் தோற்றார்—கோட்டையில் வீற்றிருப்போம் என்று கனவு கண்ட பல 'கனம்'கள் குப்புற வீழ்ந்தார்கள்—காங்கிரஸ், எங்கும் கலங்கி வீழ்ந்தது. எதிர்பாராத தோல்வி. அதைவிட, யாருமே எதிர்பாராத வகையில், கம்யூனிஸ்டுகளுக்கு வெற்றி!

"நியூஸ் வீக்" எனும் அமெரிக்க ஏடு, இந்தியாவின் படத்தைப் போட்டு, அதில் தென்னகம் முழுவதையும் சிவப்பு வர்ணம் பூசி, கம்யூனிஸ்டுகள் வசம் போய்விட்டதாகப் போட்டது. அமெரிக்க அரசும், உண்மை என்னவென்று அறிய, ஒருவர்பின் ஒருவராகப் பல தூதர்களை அனுப்பியும், செய்தி சேகரித்தது.

அவர்கள் மிரண்டதுமட்டுமல்ல, நமது கம்யூனிஸ்டுத் தோழர்கள் வேறு அவர்தம் மிரட்சிகளை அதிகமாக்கினர். பம்பாயிலிருந்த தமது கட்சிக் காரியாலயத்தை, சென்னைக்கு மாற்றினர் — தினசரி ஒன்றைத் துவக்கினர்-பார்லிமெண்டின் ஏக எதிர்க்கட்சியாக அமர்ந்தது கம்யூனிஸ்டுக் கட்சி—பம்பாயிலிருந்த ஆங்கில வார இதழையும் சென்னைக்குக் கொண்டுவந்தனர்—செங்கொடி சிறப்பாகப் பறந்தது, மவுண்ட்ரோடிலுள்ள புதுக் காரியாலயத்தில்! மகிழ்ச்சி மணம் எங்கும்; தலை நிமிர்ந்து நடந்தனர்.

அவர்தம் நடை—முழக்கம்—பவனி, ஆகியவைகளைக் கண்ட பலருக்கு, அச்சமும் அசூயையும், அதிகமாயிற்று—"ஏதேது! இனி, இவர்கள் வைத்ததுதான் சட்டம் போலிருக்கிறது. எவ்வளவு பெரியவர்களாகிவிட்டார்கள்," என்றெல்லாம் எண்ணினர். இந்தக் காட்சியைக் கண்டபோது, உண்மையிலேயே நாம், மகிழ்ந்தோம். மாற்றார் கண்களில் மருட்சியென்றால், மனம் மகிழத்தானே, செய்யும்? உற்ற சகோதரன் ஒய்யாரப் பவனி வரும் காட்சி, உள்ளத்தில், புது எண்ணத்தைப் பூக்கத்தானே செய்யும்? அந்தப் பூரிப்பு, நமக்கு! அதனால், மகிழ்ந்தோம்—கொள்கையளவில், வேற்றுமையிருந்தும்கூட — பொதுவாக, பாசீசம் முறியடிக்கப்பட்டது; வீம்பு பேசிகளோ, இந்துமகாசபைக்காரர்களோ, காங்கிரஸ் எடுபிடிகளோ அல்ல—முற்போக்காளர்கள் பெற்ற வெற்றி. அது—என்பதால் பெரு மகிழ்வு பெற்றோம்.

மகிழ்ச்சி நிலைக்கவில்லை! மண் கூடாகிவிட்டது, இப்போது! மூன்றில் ஒரு பங்கினரே, திரும்பி, சென்றுள்ளனர் சபைக்கு. இந்த வீழ்ச்சி, உண்மையில், ஆதிபத்ய வாதிகளுக்குஆனந்தத்தை அளித்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில், பயந்தவர்கள், அவர்கள்! பயம் போகிறது, தேர்தலின் விளைவால்!

ஒரே ஒரு வோட்டில் கவிழ்ந்த பிரகாசம் மந்திரிசபையின் பீடத்தில், இப்போதைய காங்கிரஸ் மந்திரிசபை சக்திவாய்ந்த பலத்துடன் அமரப்போகிறது.

* * *

தோற்றது ஏன் தெரியுமா?

ஒற்றுமையுடன், காங்கிரஸ் போட்டியிட்டது.

ஆவடி மாநாட்டின் விளைவு.

மாலெங்கோ வீழ்ச்சியே காரணம்.

இப்படி, 'ஆருடங்கள்' கணிக்கப்படுகின்றன! வோட்டு அளித்த மக்களில் பலர், ஆவடியையும் மாலொங்கோவையும் உடனடியாக விவாதித்து முடிவு கட்டக்கூடிய அளவுக்கு முதிர்ந்த அரசியல் சிந்தனையாளர்கள், அல்ல. அவர்களுக்கு, நம்பிக்கை தரக்கூடியது, எதுவோ அதுதான் முக்கியம்! அப்படிப்பட்ட நம்பிக்கையை, கடந்த பொதுத் தேர்தலின் போது கம்யூனிஸ்டுகளின்மீது மக்கள் வைத்தார்கள்! காரணம், கம்யூனிஸ்டுக் கட்சி தியாகத் தழும்புகளுடன், தேர்தலுக்கு வருகிறது; காங்கிரஸ், ஊழல் நிரம்பியதாகிவிட்டது — அதற்குப்பதில், ஒரு கட்சி வேண்டும். அது, கம்யூனிஸ்டுக் கட்சிதான், ஆகவே போடு, ஓட்டு — என்று பெருவாரியாகச் சென்று வாக்களித்தனர். வோட்டுச் சாவடியில், 'கதிர் அரிவாள்' பொறித்த பெட்டியில் ஓட்டுப் போட்டு வந்த ஒவ்வொரு ஏழையும், மிடுக்கோடு நிமிர்ந்து பார்த்தான், தேசியத் தோழனை! அந்தப்பார்வையில், நம்பிக்கை நாதம் ஒலித்தது! வாழ்வு பெறுவோம், என்று மகிழ்ச்சியுடனிருந்தான்! ஆனால், அந்த நம்பிக்கையும் மகிழ்ச்சியும், அவனுக்கு நீடிக்கவில்லை—எப்போதும் போல், காங்கிரஸ் ஆள வந்தார்களே, இருந்தனர்! அவர்களை எதிர்த்து, புது ஆட்சி அமைக்கப் போவதாகச் சொன்ன, கம்யூனிஸ்டுகளோ—ஆட்சி அமையப் போவதில்லை என்று தெரிந்ததும், கூடா நட்பும், வேண்டா உறவும், ஓடிஓடித் தேடினார்கள்,

நேற்று முளைத்த காளான்! சலசலக்கும் நரி! பச்சோந்தி!—இவைகளைக்கூட, ‘இந்திரனே, சந்திரனே’ என்று ஏற்றிப் போற்றி, தமது அரசியல் லாபத்தை அடைய முயன்றனர். இதனால், மக்கள் மன்றத்தில் இவர்கள்மீது ‘மாசும் மருவும்’ ஏற்படலாயிற்று. தேர்தலின் போது, எவரெவரை நாடினரோ, அவர்களைப் பிறகு இழித்தும் பழித்தும் பேசினர். தேர்தலுக்குப் பிறகு, ‘விருது பெற்ற வீரர்கள்’ என்பதைக் காப்பாற்றிக்கொள்வதில் கவனம் சென்ற அளவுக்கு, முற்போக்குச் சக்திகளின் உறவை வளர்த்துக் கொள்ளவேண்டும் என்கிற ஆசை, குறுகிற்று. அந்தக் கோணல் பாதையில் தக்க எடுத்துக் காட்டுத்தான், இவர்களோடு சேர்ந்திருந்த ‘பிரகாசம் கட்சி’ செய்த துரோகம்! கூடா நட்புக்கு, அது ஓர் உதாரணம்! இப்படிப்பட்ட காட்சிகளைக் கண்ட மக்கள் மன்றம், இவர்கள்மீது வைத்த நம்பிக்கைகளை, குறைத்துக் கொள்ளலாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்து, பெருமூச்சாகி, இப்போது தேர்தலின் போது, திசையை மாற்றியிருக்கிறது. இதனால், மக்களுக்கு, காங்கிரஸ் கட்சியின்மீது, அபார நம்பிக்கை வந்துவிட்டதென்று பொருளல்ல. ஆங்காங்கே, காங்கிரசை எதிர்த்தோர் பெற்றிருக்கும் வாக்குகளைப் பார்த்தால், மக்கள் மன்றத்தில் இன்னும் காங்கிரஸ்மீது இருக்கும் அருவருப்பு தென்படும். ஆயினும், காங்கிரஸ் வெற்றிபெற்றிருக்கிறது. மக்கள் மன்றத்தில் ஏற்பட்ட சலிப்பும், ஆட்சிக்கு எப்படியும் காங்கிரஸ்காரர்கள்தானே வரப்போகிறார்கள் என்கிற நம்பிக்கையும், மற்றக் கட்சிகள் யாவும் ஒன்று திரண்டு நிற்கின்றனவே எனும் நம்பிக்கையும்தான், இந்த வெற்றிக்குக் காரணமே ஒழிய, அமெரிக்கா மகிழ்வதுபோல, கம்யூனிஸ்டுக் கட்சி அழிந்துவிட்டதென்றோ, டில்லி ஆனந்தமடைவதுபோல, காங்கிரஸ் புத்துயிர் பெற்றுவிட்டதென்றோ, கணக்கிடுவது, நாட்டின் நாடியை அறியாததன் விளைவாகும். தேசியத்தார் வேண்டுமானால், ‘இந்து’ செய்வதைப்போல பிரச்சாரம் செய்து, சில்காலமாக, பண்டித நேருவின்மீது, அமெரிக்காவுக்கு ஏற்பட்டிருக்கும் அதிருப்தியைக் குறைக்கப் பாடுபடக்கூடும். அது நீடித்த பலன் தரமுடியாத அரசியல் கண்ணோட்டமாகும்.

காங்கிரசின் எதிர்காலத்தை, இந்தத் தேர்தலை வைத்து கணக்கிடமுடியாது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் வரப்போகிறது, பொதுத் தேர்தல்; அப்போது கிடைக்கும் தீர்ப்பே, அதன் எதிர்காலத்தை நிர்ணயிக்கும்!

* * *

காங்கிரஸ் வெற்றிபெற்றதால், நாட்டின் பிரச்னைகள் யாவும் தீர்ந்துவிட்டதாகக் கருதமுடியாது – எவரும். கம்யூனிஸ்டுகள் சுட்டிக் காட்டும் ஏழ்மையும் பஞ்சமும் இல்லாமையும் தொல்லைகளும் அப்படியே இருக்கின்றன. ஆகவே, அவைகளை நிரந்தரமாக ஒழிக்கும் முற்போக்குக் கட்சிகளுக்கு நிறைய வேலை உண்டு. அந்த வேலைகளை, இனி எப்படிச் செய்யப்போகிறதோ செங்கொடிக் கட்சி!—பழைய பாதையிலா? புதிய பாதையிலா?

பழைய பாதை, எது புலி, எது புள்ளிமான் என்று தெரிந்துகொள்ளாத பாதை.

ஆசை வந்தால் அணைத்து, எரிச்சல் வந்தால் ஏசிடும் பாதை.

அந்தப் பாதை, இனிப் பயன்படாது. அவைகள், யாருடன் சேர்வது என்பதைத் தீர்மானிக்க வேண்டும்.

ஆந்திரம் – தமிழகம் – கேரளம்—கன்னடம் ஆகியவைகளை எடுத்துக்கொண்டு பார்த்தால், தமிழகத்தைத் தவிர, வேறு எந்த இடத்திலும் அவர்கள் உறவாடக்கூடிய உருப்படியான முற்போக்குக் கட்சிகள் எதுவும் கிடையாது

தமிழகத்தில், நமது நல்லெண்ணத்தையும் பணியையும் தூற்றிப் பிழைப்பதே, இவர்தம் போக்காய் இருக்கிறது. இப்படிச் செய்ததால் ஏற்பட்ட ‘பயம்’ காரணமாகவே, அண்மையில் இங்கு நடைபெற்ற உபதேர்தல்களிலெல்லாம் கோட்டைவிட்டனர். அது, மிகப் பெரிய தவறாகும். கொள்கையில் உறுதியும், காற்று அடிக்கும் திக்கில் செல்லாத மனோதிடமும் இருந்தால், நிச்சயம் மக்கள் மன்றத்தில் விளங்கமுடியும்.

அந்த வாய்ப்பை, இந்த மூன்றாண்டுக் காலத்தில், ஆந்திரக் கம்யூனிஸ்டுகள் இழந்துவிட்டனர் என்பதையே, இந்தத் தேர்தல் முடிவு சொல்லுகிறது.

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளும், ‘அந்த வாய்ப்பை இழந்துவிட்டோமோ?,’ என்று தமது மனதில் கொண்டுள்ள பயத்தையே, துணைத் தேர்தல்களில் அவர்கள் போட்டியிடாத முறை விளக்குகிறது.

அதனால், அவர்களுக்கு மிகவும் அன்புடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்! உண்மையான கம்யூனிசம் வெற்றியடைய வேண்டுமென்றால், பாசிசத்துக்குப் படுகுழி தோண்டப்படவேண்டுமென்றால், முற்போக்குக் கட்சிகளை நம்பும் சுபாவமும்—அவர்களை மதிக்கும் நல்லெண்ணமும், கூடாத நட்பினைக் கொள்ளாத மன உறுதியும், ஏற்படவேண்டும். உலகத் திரையில், இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ஏற்பட்டிருக்கும், நிலைமை வெகு விசித்திரமானது! நேருவை ஒரு வாயால் கண்டிக்கவும் வேண்டும்—அதே சமயத்தில் போற்றவும் வேண்டும் — இப்படியொரு இக்கட்டான நிலை! இதற்குக் காரணம், சொந்த நாட்டின் பிரச்னைகளை, ‘வேறொரு’ கண்ணாடி போட்டுக்கொண்டு, இவர்கள் பார்ப்பதனால்தான்.

“இந்திய உபகண்டம்,” என்றால், ‘மாஸ்கோ’ கண்ணாடி போட்டுக்கொண்டு பார்க்கின்றனர்.

“தென்னாட்டின் பிரச்னை,” என்றால் ‘டில்லி’க் கண்ணாடி போட்டுக்கொண்டே ஆராய்கின்றனர்.

இப்படி ‘அகில’ உலகம், ‘அகில’ தேசியம் என்று கண்களை உயர்த்தும்போது சொந்த நாட்டின் பல பிரச்னைகளை இழக்கத்தான் நேரிடுகிறது! மாஸ்கோவுடன் நேரு கைகுலுக்கிவிட்டால், உடனே, அவரைப் புகழ்ந்து பேசவேண்டிய நிலை உண்டாகிறது. மாஸ்கோவுக்காக, வக்காலத்து வாங்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறது! அதே போல தென்னாட்டின் பிரச்னையைப் பற்றி பேசவேண்டுமென்றால், உடனே, டில்லி! தென்னாடு!’ என்று ஐக்கியத்தைக் குலைப்பதாகப் பேசியதாக அர்த்தம் ஏற்படுமோ?—என்கிற அச்சம் உண்டாகிறது.

இதனால், தெற்கே உள்ள கம்யூனிஸ்டுகள், ஒரு அவசியமற்ற சிக்கலான இடத்திலிருந்துகொண்டு அவதிப்படுகிறார்கள்.

அவர்களிருக்கிற தென்னாடு, ஆலைப்பூமியல்ல! விவசாயிகள் தேசம்!—வளரும், நாகரீக உலகில், ஒரு பூபாகம், விவசாயிகளை நம்பியே

வாழவேண்டிய நிர்க்கதிக்கு ஆளாகிறதென்றால்,அது அழிவுப்பாதையில் செல்கிறது என்று பொருளாகும். இதையே, நாம், நமது திராவிடநாடு கோரிக்கைக்கு முக்கியம் என எடுத்துக்காட்டி வருகிறோம்! இந்தத் துறையில், நமது பூமியை நல்ல 'மார்க்கெட்' என்று நினைக்கும் வடவரின் போக்கைச் சுட்டிக்காட்டி, திராவிடநாடு, வேண்டுமெனச் சொல்லிவருகிறோம்.

தமிழகத்துக்கு மட்டுமல்ல—ஆந்திரம், கேரளம், கன்னடம், எங்கும் இதே கதிதான்.

ஆலைகள், கிடையாது ஆங்காங்கே! டில்லியின் சலுகைகளும் கிடையாது!

இதை எடுத்துச் சொல்லலாமே, கம்யூனிஸ்டுகள்? எங்கே சொல்லுகிறார்கள்! பயப்படுகிறார்கள், 'அகில இந்தியத்தை' இது குலைத்துவிடுமோ, என்கிற அச்சத்தால்! அதன் தலைமையே, வடக்கில் தானே, இருக்கிறது.

இந்தப் போக்கினை விடுத்து, மக்களின் பொதுப் பிரச்சினைகளை விளக்கிடும் வழி வகைகளில், ஈடுபட வேண்டுமென, அவர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறோம். இதனால், அவர்கள் மக்கள் பிரச்சினைகளில் ஈடுபடவில்லை என்பதல்ல, நமது குற்றச்சாட்டு! அடிக்கடி எழும் பிரச்சினைவேறு! பொதுவான பிரச்சினைவேறு!

அத்தகைய பொதுப் பிரச்சினைதான், தானிருக்கும் பூமி தளிர் மலர்ச் சோலையாகவேண்டும்; என்பது.

கர்னூலிலிருந்துகொண்டு கல்கத்தாவில் நடைபெறும் ஆட்சியின் ஊழல்களைக் கண்டிப்பது, தாயகப் பிரச்சினை ஆகாது; அகில இந்தியப் பிரச்னையாகும்.

ஆகவே, தாங்கள் வாழும் நிலப் பகுதியைப் பிடித்துக்கொண்டிருக்கும், முக்கியப் பிரச்னைகளில் கவனம் செலுத்த வேண்டும்—அப்படிக் கவனம் செலுத்தும் கட்சிகளுடன் உழைக்கவேண்டும்.

தி. மு. க. தாயகத்தின் வாழ்வுக்காகப் பாடுபடும், கட்சியாகும். அது தன்னுடைய தாயகம் எதுவென்பதையும் வரையறுத்து, அது வாழ இடையூறாக இருக்கிற பிரச்னைகளைப் பற்றியும் எடுத்துச் சொல்லி வருகிறது.

இப்படி, துணையிருக்க, விரோதியை விரும்பிச்சென்று, ஊர்ப் பழிக்கு ஆளானதன் விளைவே—ஆந்திரத் தேர்தலின் பாடமாகும்.

இதனை. கம்யூனிஸ்டு அன்பர்கள், அனைவரும் உணர வேண்டும்.

காங்கிரஸ் வெற்றி பெற்றதற்குக் காரணம், காங்கிரஸல்ல; கம்யூனிஸ்டுகள்தான்.

சாகும் கட்சிக்கு சந்தோஷம் கிடைக்கச்செய்த தவறு, ஆந்திரக் கம்யூனிஸ்டுக் கட்சி கடந்த மூன்றாண்டுகளில் நடந்து சென்ற பாதையே ஒழிய; காங்கிரசுக்கு ஏற்பட்டுவிட்ட மகத்தான பலத்தால் அல்ல. சுயேச்சைகள் 22-பேரல்லவா, தோற்கடித்திருக்கின்றனர், காங்கிரசை!

கடந்த பொதுத் தேர்தலில், மக்கள், தங்களது ஏழ்மை—பஞ்சம்—முதலிய பிரச்னைகள் உடனடியாகப் போகும் என்று எதிர்பார்த்தனர்— அந்த ஆசையை ஊட்டிய கம்யூனிஸ்டுக் கட்சிக்கு வாக்களித்தனர்.

அவைகள் போகவில்லை! அதனால், இப்போது, அவர்களுக்கு வாக்கு அளிக்கவில்லை! அவர்களை எதிர்த்தவர்களுக்கு, வாக்கு அளித்திருக்கிறார்கள்.

ஏழ்மை—பஞ்சம், இவைகளைப் போக்க அகில இந்தியாவிலும் கம்யூனிஸ்டு ராஜ்யம் ஏற்படும் என்று, இன்னும் பலகாலத்துக்கு மக்களை நம்பவைப்பது, எளிதல்ல.

மக்கள், தமக்கு ஏற்படும் நன்மைகள், வாழ்க்கை வழிகள் ஆகியவைகளுக்கு வழி என்ன என்பதையே முக்கியமாக நினைக்கின்றனர்.

அந்த நன்மைகளை, டில்லி அரசு ஒரு போதும் செய்துவிடப்போவதில்லை.

இதை எடுத்துக் காட்டலாம் கம்யூனிஸ்டுத் தோழர்கள்! தாங்கள் பிறந்த இடத்தின் முக்கியப்பிரச்னைகளைக் கவனிப்பதே தமது லட்சியம்—என்று காட்டிக்கொள்ளலாம்!

அப்போதுதான், இவர்களைப் பற்றி மக்கள் மனதில் இயற்கையாக உண்டாகியிருக்கும் தப்பெண்ணம் போகும்—'வெளியிடங்களுக்காக,' உழைப்போர் எனும் கெட்ட பெயர் நீங்கும்.

அதற்கான, சந்தர்ப்பம் போய் விடவில்லை! முயல்வார்களா, இனிமேலாவது!—என்று, வாடிடும் நாடு வாழவேண்டுமெனும் ஆசையால், ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் ஆகிய இடங்களிலுள்ள கம்யூனிஸ்டுகளைப் பார்த்துக் கேட்கிறோம்.

ஒருவன் நன்மை செய்யாவிட்டாலும் அவன் தவறுகள் செய்தால் அவற்றை மன்னிப்பதும் மறப்பதுமே நமது பண்பாடு என்பதை எடுத்துக்காட்டவும், அதோடு தம் நாட்டின் நாடியை அறியமுடியாதவர்கள் நானிலமெங்கும் குடை பிடிக்க முயல்கிறார்களே என்ற பரிதாபத்தோடும், இனிமேலாவது சகோதர உணர்ச்சி ஏற்படாதா என்ற நல்லெண்ணத்தோடுமே இதனை எழுதுகிறோம்.

தாயகம் வாழவேண்டும்!

அதை மறந்தால், மக்கள் அவர்களை மறக்கவே செய்வர்!!

★

சந்தேகம்தான்!

—★—

சட்டசபை மெம்பர்கள் பலர் தங்கள் சொந்த மொழியைத் தவிர வேறு மொழிகளைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாய் இருப்பதால்,பல மொழிகள் தெரிந்த மந்திரிகள் தங்கள் இஷ்டம்போல் ஏதாவதொரு மொழியில் பதில்சொல்லும்போது, மந்திரி பேசிய மொழியறியா உறுப்பினர், தம்முடைய மொழியில் விளக்கந்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதும், பின்னர், அதனை மறப்பதும் ஏற்றுக்கொள்வதுமான சிக்கல் மந்திரிகளை பெருந்தொல்லை படுத்திக்கொண்டிருந்த நெருக்கடியான நிலை இப்பொழுது மாறி,இனி எந்த மந்திரி எந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதாக இருந்தாலும் ஆங்கிலத்தில்தான் பதில் சொல்ல வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

எனவே, இனிமேல், ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்கள் ஆங்கிலத்தில் பதில் கூறிய மந்திரியைத் தனியாகச் சந்தித்து விபரம் அறிந்துகொள்வதைத்தவிர வேறு வழியில்லை. இந்த ஏற்பாட்டினால் இன்னும் ஒரு தொல்லை, சட்டசபையில் இல்லாமல் இருக்குமென்று எதிர்பார்ப்பதற்கும் இடம் ஏற்படுமா? அதாவது 'கயிறு திரித்தல்' 'கண் வைத்தல்' போன்ற ஒரு சொல்லுக்கு இரு பொருள் விளக்கம் தந்து 'மக்கட் பணி' நடாத்தும் கேலிக்கூத்தாவது இனிமேல் நடக்காமல் இருக்குமா என்பது சந்தேகந்தான்!

★

[தொடர் சித்திரம்]

கடிகாரம்

16

[அண்ணல்]

ஒருமுறை சந்தேகத்துக்கு ஆளாகிவிட்டாலே, சிலந்திக் கூட்டிலே சிக்கிய ஈயின் கதிதான். எந்தப்பக்கம் கவனத்தைச செலுத்தினாலும், கடைசியில் அதே புள்ளியில் வந்து நின்று, நினைவுகள் அசை போடும். அதிலும், எனக்கே சொல்லவேண்டியதில்லை—சிறு சந்தேகத்தைக் கிளறப்போய்த்தானே சீரழிந்த நல்லானின் சரிதம் அறிந்தேன். ஆமாம்; ஏன் இந்த நாச்சி வள்ளியானாள்? எப்படி அந்த வரதனோடு வாழ்க்கை நடத்தினாள்? —கடையில் உட்கார்ந்திருந்த என் காதுகளில், "மாம்பழம்! மாம்பழம்!" என்று யாரோ கூவி விற்றுக் கொண்டு போவது விழுந்தது.

"மாம்பழம்"

"என்னம்மா, நீ! அழுகினதைக் கொடுத்து, ஆளை ஏமாற்றப் பார்க்கிறீயே"

இந்தப் 'பேரம்' காதில் விழுந்தது. அழுகிய பழத்தை, எந்த மனிதனும் விரும்புவதில்லை. அது போல, கெட்டலைந்த பெண்ணையும், விரும்பமாட்டார்கள். நல்லானுக்குக் கோபம் வந்ததில் என்ன தவறு? உண்மையில், நாச்சி, ஒரு அந்திநேரத்து அழகியா...? ஏன் இருக்கக்கூடாது? மீண்டும், வீதியில், "மாம்பழம்! மாம்பழம்" என்று கூவுவது கேட்டது. மனம் எங்கோ ஓடிற்று.

*

அருமையான மாம்பழம்! அதைத் தின்றுவிட்டால், பிணி, மூப்பு, நரை ஆகியவைகளிலிருந்து தப்பி, வசீகரத்துடன் என்றும் வாழலாம். அத்தகைய அருமையான மாம்பழம், முனிவர் ஒருவருக்குக் கிடைத்தது. அதை அவர் எடுத்துக்கொண்டு வந்து அரசனிடம் கொடுத்தார் — அரசன் யோசித்தான், "இந்த மாம்பழத்தை நமது ராணி உண்பதே நல்லது. அவள் என்றும் அழியாத அழகுடன் விளங்குவதைக் காண்பதே எனக்கு ஆனந்தம்" என்றெண்ணி, அவளிடம் கொண்டுபோய்க் கொடுத்தான். ராணிக்கு, அரண்மனைக் குதிரையோட்டியின்மீது ஆசை! அவள் யோசித்தாள், "நாம், இளமையாயிருப்பதைவிட, நமது காதலன் கண்ணுக்கழகாய் இருப்பதைக் காண்பதே, எனக்கு விருந்து. எனவே, அவரிடம் கொடுப்பேன்" என்று குதிரைக்காரனிடம் கொண்டுபோய்க் கொடுத்தாள். அவனுக்கு அரண்மனைப் பணிப்பெண்மீது காதல்! அவன் நினைத்தான், "இந்தப் பழத்தை அவளுக்கே தரவேண்டும்" என்று. காதலன் தந்த மாம்பழத்தை வாங்கிய பணிப்பெண் நினைத்தாள். "நாம் வளர்க்கும் இந்த உடலோ, அரண்மனைச் சோற்றை உண்டு வளர்கிறது. இவ்வளவு உயர்ந்த கனியை நான் உண்பதால், என்ன இலாபம்? இதை அரசன் உண்டாலும், அவன் நீடூழிகாலம் வாழ்வதால், குடிபடைகளுக்கு நன்மையுண்டு. ஆதலால், அவனிடமே அளிப்பேன்" என்று அரசனிடம் கொண்டுபோய் மாங்கனியைக் கொடுத்தாள்.

அரசன் திடுக்கிட்டு, விபரம் கேட்க, குதிரைக்காரன், ராணி ஆகியோரின் குட்டுக்களை வெளிப்படுத்துகிற அளவுக்குச் சென்றது. பிறகு......!

*

மாம்பழம் விற்றுக்கொண்டிருந்தவள், எங்கோ போய்விட்டாள்!

அதைப்போல, இந்தக் கடிகாரமும்......!

சே! நாச்சியைப்பற்றி அப்படியா எண்ணமுடியும்? வள்ளி என்ற பெயருடனிருக்கும் நாச்சியின் முகத்தைப் பார்த்தால், எந்த முட்டாளும் சந்தேகப்படமுடியாதே!

ஆமாம..........அப்படித்தான் எண்ணியிருப்பான், மாங்கனியைப் பெற்றதும், மனைவியிடம் தரவேண்டும் என்று நினைத்தானே அந்த அரசனும்......!

"பெண்கள், ஒரு இரகசியச் சுரங்கம்—அதனுள் கிடக்கும் அந்தரங்கங்களை அறிவதென்பது சாத்தியமில்லை"

"இல்லை, இல்லை! பெண்கள் வாயாடிகள். அவர்கள் வாயில் ஒரு இரகசியமும் தங்காது. ஊருக்கு ஒரு விஷயம் சீக்கிரம் பரவவேண்டுமென்றால், ஒரு பெண்ணிடம் 'ரகசியமாக'ச் சொன்னால் போதும்"

இருகூற்றுக்களை வெளியிட்டவர்களும் அறிஞர்கள்தான்! எந்த அறிஞரை சரியென்று ஏற்றுக் கொள்வது? ஊம்......! ஒவ்வொரு அறிஞனும், தன்னுடைய மனைவியின் குண விசேஷங்களை வைத்தே, உலகுக்குப் பொதுநீதி கூறப் புறப்பட்டு வருவார்கள் போலிருக்கிறது!

......இப்படி எண்ணாததெல்லாம் எண்ணிற்று, மனம்.

"சரி! உண்மையை வள்ளியிடம் போய்க் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்," என்கிற முடிவுக்கு வந்தேன். கடை வேலை முடிந்ததும், சிறைச்சாலைக்குப்போய், அனுமதி வாங்கிக்கொண்டு வள்ளியைச் சந்தித்தேன். என்னைக்கண்டதுமே, "சாமி! அவரு நல்லாயிருக்காருங்

காஞ்சி
தி. மு. க. தேர்தல்

—::—

காஞ்சீபுரம் நகர தி. மு. க. செயற்குழுத் தேர்தல் 27-3-55 ஞாயிறு காலை 9 மணிக்கு திராவிடநாடு நிலையத்தில் நடைபெறும்.

1. நகர செயற்குழுவிற்கு நிற்க விரும்புகிறவர்கள் நகர தி. மு. க. செயலாளரிடம் மனு செய்துகொள்ள வேண்டும்.

2. (அ) ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரும் பொது உறுப்பினர்கள் பட்டியலை 25-3-55க்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்கவேண்டும். அப்படிச் சேர்ப்பித்த உறுப்பினர்கள்மட்டுமே ஓட்டு செய்ய அருகதையுடையவர்கள் ஆவார்கள். (ஆ) விடுபட்ட பொது உறுப்பினர்கள், உறுப்பினர் ரசீதைக் காட்டினால், நகர செயலாளரின் அனுமதியின்பேரில் ஓட்டுசெய்ய அனுமதிக்கப்படுவர்.

இரா. வெங்கடேசன்,
செயலாளர், நகர தி. மு. க.

களா?," என்று கலக்கத்தோடு, கேட்டாள்.

"அவன் எக்கேடுகெட்டால் உனக்கென்ன! நாச்சி....அவ்வளவு அக்கரையாய் விசாரிக்கும் நீ, இந்தக் காலிப்பயல் வாதனேடு, இத்தனை நாளும் காலம் தள்ளியது சரியா?," என்று கேட்கவேண்டும் போலிருந்தது. ஆனால், அவளது அமைதியான முகத்தைக் கண்டதும், என்னால் அப்படிக் கேட்க முடியவில்லை, அதனால், "வள்ளி உன் பேரு நாச்சிதானே!", என்றேன்.

அவள் உடனே புரிந்துகொண்டாள்," எல்லா விஷயத்தையும் உங்களிடம் சொல்லிவிட்டுதா? சாமி! என் பேரு, நாச்சிதான். ஆனால், நான் வள்ளியின்னு ஏன் மாற்றி வைச்சுக்க நேர்ந்தது, தெரியுமா? என் புருஷன் போனதும்,நானுண்டு என் இட்லித் தொழிலுண்டு, மீந்த நேரத்தில் துக்கமும் கண்ணீரும் உணடு என்று காலத்தைக் கழித்துவந்தேன்."ஓர், இரவு! எப்படி எனக்குத் தூக்கம் வரும்? எப்படியிருக்கிறாரோ, அவர், என்று எண்ணியபடி படுக்கையில் கிடந்தேன். அப்போது, கொல்லைக் கதவு தாழ்ப்பாள், தானே கழன்று விழும் சப்தம் கேட்டது—எப்படி ஆளில்லாமல் அதைக் கழற்ற முடியும்? ஏதோ மனப்பிராந்தி — என்று எண்ணிய வண்ணம் புரண்டு படுத்தேன். கொஞ்சநேரத்துக்கெல்லாம், நான் படுத்திருக்கும் இடம் நோக்கி யாரோ அடிமேல் அடிவைத்து வருவதுபோலிருந்தது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். ஆள் வந்த திக்கைப் பார்த்தேன்—மங்கலான வெளிச்சம்பட்டு, ஒரு பிச்சுவா மின்னுவது தெரிந்தது. 'ஓ' என்று கத்த முயன்றேன்—முடியவில்லை—அப்படியே கட்டிலில் சாய்ந்தேன், பிறகு...!

(வளரும்)

★

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் விழித்தனர்! தமது வேலைகளைப் பார்க்கப் போகலாயினர்.

ஒரு நாள் — இரண்டுநாள்—சாத்தானுக்குப் பசி.

முட்டாள்கள், கனவானுக்கு கோபுரத்துக்குப்போய் உணவு கொடுக்கவில்லை—தலையால் உழைத்து சம்பாதித்துக் கொள்வார், என்று இருந்தனர்.

முட்டாள், வந்து பார்த்தான்—மக்களைக் கேட்டான், "கனவான்! தலையால் வேலைசெய்ய ஆரம்பித்து விட்டாரா?"

"இல்லை! தொண்டையைத்தான் கிழித்துக் கொண்டிருக்கிறார்."

சாத்தான் பாடு கஷ்டமாயிற்று தளர்ச்சி தாக்கமுடியவில்லை. தடுமாறி, வீழ்ந்தது கோபுரத்திலிருந்து. தலை கீழாகப் படிகட்டுகளில் உருண்டு கொண்டிருந்தது. முட்டாள், ஓடி வந்து பார்த்தான். கூடியிருந்தோர், "கனவான், இப்போதுதான் தலையால் வேலைசெய்கிறார்" என்றனர்.

முட்டாளும், 'ஆமாம்' என்று தலையசைத்தபடி பார்த்தான். சாத்தான் செத்துக்கிடந்தது!

★

வீரன், கதையை முடித்துவிட்டு நான் என்ன சொல்வேனே என்று பார்த்தான். "வீரா! 'முட்டாள்' என் போருக்கு சாட்டையடி தருவதுபோல ஒரு கதையே தீட்டிவிட்டார், டால்ஸ்டாய். அதுசரி, சாத்தான் என்று சொன்னயே, அது என்ன? நீ பார்த்திருக்கிறாயா?"

"சாத்தான் என்றால் பிசாசு!"

"பேய்-பூதம்-பிசாசுகளில் உனக்கு நம்பிக்கையுண்டா?"

"ஏன் கிடையாது? உண்டு!"

"நீ, எப்போதாவது அவைகளைப் பார்த்திருக்கிறாயா?"

"ஏன்! தினசரி பார்த்தவண்ணம் தான் இருக்கிறேன்."

"என்ன வீரா, விளையாடுகிறாய்?"

"நான் விளையாடவில்லை, தோழா! பேயும் பிசாசும், மறைந்துவாழவில்லை. மனிதர்களிடமே இருக்கிறது. பேய்; பூதம் என்றால் இருட்டிலும் மரத்திலும் இருக்கும் என்று எண்ணுகிறாய். இல்லை, இல்லை! மனித மந்தையில்தான், அனைகள் உள்ளன. அவைகளுக்குச் சொல்லப்படும், அந்தக் குணதிசயங்களும், மனிதர்களிடம்தான் காண்கிறேன். நான் சொல்லிய கதையில, சாத்தான் என்று, டால்ஸ்டாய் குறிப்பிட்டிருக்கும் விஷயங்கள் என்னென்ன தெரியுமா?"

"என்னென்ன வீரா"

"நீதான், பெரிய பெரிய பத்திரிகைகளையெல்லாம் படிக்கிற ஆளாயிற்றே; நீயே கண்டுபிடித்து, எனக்கு எழுது"

வீரன், போய்விட்டான். கதையைப் படித்த உங்களில் யாருக்காவது, கதையில் வந்த 'சாத்தான்' எதை எதைக் குறிக்கிறது எனப் புரிகிறதா? புரிந்தால், தயவுசெய்து எழுதுங்கள்.

★

இந்தி எதிர்ப்பில் பாரதியார்

—[:]—

தமிழ்மொழிமீது யார் யாருக்கு உண்மையான பற்றுதல் இருக்கிறதென்பதனை அறிய ஒரு வாய்ப்பை 1938-ல் ஆச்சாரியாரின் கட்டாய இந்தி நுழைப்பு உண்டாக்கிற்றல்லவா!

சென்னையிலுள்ள அழகிய மண்டபத்தில்(சவுந்தர்யமஹால்) நாவலர் பாரதியார் அவர்கள் தலைமையில் ஒருஇந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. "சிறை சென்றுதான் தமிழைக் காக்க வேண்டுமென்ற நிலையைஅன்பர் ஆச்சாரியார் உண்டாக்குவாரானால், அதற்குத் தமிழ்ப்பெரு மக்கள் தயாராகவே உள்ளனர் என்பதை ஆச்சாரியாருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று பேசித் தமிழ் மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கிய பெருமை நாவலரையே சாரும்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் துவங்கி நடைபெற்றதைக்கண்ட ஆச்சாரியார் சிறைக் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு தமிழ் மக்களைத் தம்முடைய விருந்தினராக அழைத்துக்கொண்டு இருந்த சமயத்தில் சென்னை நேப்பியர் பூங்காவில் ஒரு இந்தி எதிர்ப்புக் கூட்டம் நடைபெற்றது. நாவலர் பாரதியார் பேசினர். 'நான் சிறை புகாமல் இருப்பதைக் கண்டு தாம் பெரிதும் வருத்தப்படுவதாக இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் (அடிகள்) என்னிடம் கூறினர். ஆனால், பெரியார் இராமசாமி அவர்கள் 'நாங்கள் இருக்கும்போது தாங்கள் சிறை புகலாமா' என்றுகூறி அவருக்கு என்மீதுள்ள அன்பைக் காட்டுகிறார்" என்பதாகப் பேசி, ஒரு நுணுக்கமான அரசியல் விளக்கத்தையும் தந்தார்.

அரசியற் கருத்துக்கள்

[அன்று முதல் இன்று வரை]

[பேராசிரியர் இருதயராஜ்]

பதினெட்டாவது நூற்றாண்டு

பதினேழாவது நூற்றாண்டில் ஐரோப்பாவின் அரசியல் கருத்துக்கள் வளர்ச்சியில் ஆங்கிலேயரின் பங்கு மகத்தானது. அமைதியான அரசியலுக்கே ஆலயமெனப் புகழப்பட்ட ஆங்கிலேயர் நாட்டில் அந்த நூற்றாண்டில் இரண்டு புரட்சிகள் நடந்தன. ஒன்று, மன்னனுக்கும் மக்களுக்கும் போர் மூண்டதன் விளைவாக, முதலாவது சார்லஸ் ஸ்டுவர்ட் மன்னன் பழிவாங்கப்பட்டான். மற்றொரு புரட்சி போர்முரசு கொட்டாமல், ரத்தக் களறி ஏற்படாமல் இரண்டாவது ஜேம்ஸ்ஸ்டுவர்ட் மன்னனை இறக்கிவிட்டு சில கட்டுப்பாடுகள் நிபந்தனைகளுக்குட்பட்டு வில்லியம் சிம்மாசனம் ஏறியது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சிகள் ஐரோப்பிய நாடுகளுக்குச் சிறந்த படிப்பினையாக இருந்தன. அத்துடன் ஹாப்ஸ், லாக் ஆகிய இரண்டு ஆங்கிலேயர்களும் ஒப்பந்தக் கொள்கையைப் பற்றித் தந்த விளக்கங்கள் ஐரோப்பிய அறிஞர்களின் சிந்தனையைக் கிளறிவிட்டன. உண்மையிலேயே இங்கிலாந்தில் பதினேழாவது நூற்றாண்டில் தோன்றிய இந்த இரு அரசியல் நிபுணர்களும், அங்கு ஏற்பட்ட இந்த இரு புரட்சிகளும் அடுத்த நூற்றாண்டில் ஐரோப்பாவில், அதுவும் முக்கியமாய் பிரான்சில் புதிய அரசியல் கருத்துக்கள் உருவாக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தன.

எனவே பதினெட்டாவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் பிரச்சனைகள் தீர்ந்து, மக்கள் அமைதியாக, முந்தின நூற்றாண்டில் தாங்கள் வெற்றிகரமாய் நடத்திய போராட்டங்களின் பலன்களை அநுபவித்துக் கொண்டிருந்த நேரத்தில்தான் பிரான்சில் முதன் முதலாக மக்கள் உரிமைகளைப் பற்றிய பிரச்சனைகள் ஆராய்ச்சிக்கே எடுத்துக் கொள்ளப்பட்டன.

இந்த ஆராய்ச்சி பிரான்சில் காலந்தாழ்ந்து ஆரம்பிக்கட்டபோதிலும் அதன் விளைவாக நேர்ந்த நிகழ்ச்சிகள் உலகிலேயே மாபெரும் புரட்சிகரமானதாகக் கருதப்பட்டு 19-வது, 20-வது நூற்றாண்டுகளில் உலக அரசியல் கருத்துக்களையே உருவாக்கின என்று சொன்னால் மிகையாகாது.

இதற்கெல்லாம் காரணமாயிருந்தவர்கள், மாடன்ஸ்க்யூ, வால்டேர், ரூசோ என்ற மூன்று பிரெஞ்சு அறிஞர்கள்.

மான்டஸ்க்யூ (1689–1755)

மான்டஸ்க்யூ, என்பவர் ஆங்கிலேயருடைய வரம்புடைய முடியாட்சியைக் கண்டு வியந்தார். அந்த ஆட்சியில்தான் மக்களுடைய உரிமைகளும் சுதந்தரமும் நன்றாகப் பாதுகாக்கப்படுகின்றன, அங்குதான் சட்டம் செய்யும் அதிகாரம், நிர்வாக அதிகாரம், நீதி பரிபாலனம் ஆகிய மூன்றும் தனித்தனியாக ஒன்றுக்கொன்று சம்பந்தப்படாமல் இயங்குகின்றன, ஆகவே எங்கு இம்மூன்று அதிகாரங்களும் ஒன்றாகப் பிணைக்கப்படாமல் தனித்தியங்குகின்றனவோ அங்குதான் மக்கள் சுதந்தரம் காப்பாற்றப்படும் என்ற முடிவுக்கு வந்தார்.

பிரான்சில் அக்காலத்தில் இருந்த அரசியல் நிலைமை இந்தக் கருத்துக்கு ஆதாரமாயிருந்தது. பதினான்காவது லூயி மன்னன் பிரான்சை ஆண்டபோது அவனுடைய அதிகாரத்துக்கு அளவேயில்லை. அவன் விரும்பினால் ஒரு பிரஜையைத் தூக்கிலிடமுடியும். நாட்டைவிட்டே துரத்த முடியும். பழங் காலத்து காட்டுராஜாக்களைப் போலவே நடந்து கொண்டான்—மக்களைப்பற்றியோ அவர்கள் உரிமைகளைப்பற்றியோ கிஞ்சித்தும் கவலைப்பட்டவனல்ல அவன். பிரபுக்களுக்கெல்லாம் முக்கிய வரிகளே கிடையாது. ஏழைகளெல்லாம் பலவித வரிகள் கொடுக்கும்படி நிர்ப்பந்தம் செய்யப்பட்டனர். ஏன் இந்த அக்கிரமம் என்று கேட்பாரில்லை. ஏழைகளுக்காகப் பரிந்து பேசுபவர் ஒருவருமில்லை. அரச சபையில் மன்னனால் நியமிக்கப்பட்ட பிரபுக்களே அங்கம் வகித்தனர். மன்னன் விருப்பத்தை நிறைவேற்றிவைக்கத் தயாராயிருந்தார்கள் அவர்கள். மன்னன் நினைத்ததை சட்டமாக்கித் தந்தார்கள். மன்னனால் நியமிக்கப்பட்ட மந்திரிகள் அரசசபையின் ஆணையை அப்படியே நிறைவேற்றிவைக்கக் காத்திருந்தார்கள். மக்களின் குறைகள் மன்னனின் செவிகளுக்கு எட்டுவதே சிரமமாயிருந்தது.

நீதிபதிகளும் மன்னர்களால் நியமிக்கப்பட்டவர்களே. நியாயம் வழங்க நியமிக்கப்பட்ட அவர்கள், தங்கள் பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டுமானால், அரசருக்கு வேண்டியவர்களை விடுவித்தும், அவருக்குப் பிடிக்காதவர்களைத் தண்டித்தும், அரசனுடைய அன்பையும் ஆதரவையும் பெற வேண்டிய அவலநிலையில் இருந்தார்கள்.

இதையெல்லாம் நடைமுறையில் கண்ட மான்டஸ்க்யூ, எல்லா அதிகாரங்களும் மன்னனுடைய கையில் குவிந்திருந்தால் மக்களுடைய சுதந்திரம் நிலைத்திருக்காது என்றறிந்தார். இங்கிலாந்தில் இந்த அதிகாரங்கள் பிரிந்திருப்பதால்தான் மக்கள் மன்னனைப்பற்றி பயமின்றி வாழமுடிந்தது என்று கருதினார்.

அப்பொழுது இங்கிலாந்தில் இருந்த ஆட்சிமுறை அமைப்பின்படி, மன்னன் வெறும் பொம்மையைப்போல அலங்காரத்துக்காகச் சிம்மாசனத்தில் வைக்கப் பெற்றிருந்தான். அவன் பார்லிமெண்ட் என்ற மக்கள் சபையைக் கூட்டினால்தான் அச்சபை கூடமுடியும். அவன் விரும்பினால் சபையைக் கலைத்துவிடலாம் என்ற நியதி இருந்தாலும் அவன் சபையைக் கூட்டாமலேயும் இருக்கமுடியாது. விருப்பம்போல் கலைத்து விடவும் முடியாது. அவ்வளவு பயம் இருந்தது மன்னனுக்கு அச் சபையினிடம். ஏனெனில் மன்னனுடைய செலவுக்கு பணம் தருவது இந்தச் சபைதான். அதனால் அதனுடைய விரோதத்தையோ வெறுப்பையோ சம்பாதித்துக் கொள்ள மன்னன் விரும்பினதில்லை.

மக்கள்சபை இரண்டு பிரிவாய் இருந்தது. மேல் சபையில் பிரபுக்களும் கீழ் சபையில் பொதுமக்களின் பிரதிநிதிகளும். சட்டங்கள் இவைகளால்தான் நிறைவேற்றப்பட்டன. ஆனால் எந்த சட்டமாயினும் மன்னருடைய கையெழுத்தும் அங்கீகாரமும் பெற்றால்தான் அமுலுக்கு வரும். இந்த அங்கீகாரம் இல்லாவிட்டால் சட்டமாக முடியாது என்றாலும், மன்னர் நடைமுறையில் அங்கீகாரம் செய்யாமலும் இருக்க முடியாது, மக்கட்சபையின் விரோதத்தை சம்பாதித்துக் கொள்ள வேண்டி நேரிடும் என்ற காரணத்தால்.

கீழ் சபை அங்கத்தினர்களில் பெரும்பான்மையானவர்கள் சேர்ந்திருக்கும் கட்சியிலிருந்து மந்திரி சபை நியமிக்கப்படும். அதன் பிரதம மந்திரியும் அவரது சகாக்களும் கூட்டுப் பொறுப்புடன் மக்கட் சபையில் நிறைவேற்றப்படும் சட்டதிட்டங்களை அமுலுக்குக்கொண்டு வந்து நிர்வாகம் செய்வார்கள். அந்த மந்திரிசபையில் எந்த மந்திரி குற்றம் செய்தாலும் முழு மந்திரி சபையும் கூட்டாகப் பதவியைவிட்டு விலக வேண்டும். எந்த நேரத்தில் மந்திரிசபை அமைத்த கட்சியினது பலங்குறைகிறதோ அல்லது எந்த மந்திரியாவது கொண்டுவரும் பிரரேபணை கட்சி வலுவின்றி தோற்று விடுகிறதோ அப்பொழுதே மந்திரி சபை கலைக்கப்படவேண்டும்.

நீதிபரிபாலனத்தைப் பொறுத்த மட்டில், நீதிமன்றங்கள், மன்னர்கள், மந்திரிகள், மக்கட் சபையினர் யாருடைய தலையீடின்றி சுயேச்சையாக இயங்கிவந்தன. நீதிபதிகள் நியமிக்கப்பட்டபின், அவர்கள் நடத்தையில், குறைகள் கண்டு பிடிக்கப்படாதவரையில் யாராலும் அவர்களை நீக்கிவிடமுடியாது. கொலைக்காக அல்லது தேசத் துரோகத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒருவன், மன்னனிடம் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிக்கொள்ளலாமே தவிர வேறு எந்தவிதத்திலும் நீதிமன்றங்களின் முடிவை மாற்றவே முடியாது.

இவ்விதம் இங்கிலாந்தில் ஆட்சியின் மூன்று பகுதிகளும் இருந்ததால்தான், அங்கு சுதந்தரம் காப்பாற்றப்பட்டது. அப்படியின்றி மூன்று அதிகாரங்களும் கட்டுப்பாடுகள் வரம்புகளின்றி ஒருவருடைய கையிலேயே இருந்தால் சுதந்தரமே அழிந்துவிடும் என்றார். இங்கிலாந்தில் இருப்பதுபோல் ஒவ்வொரு அதிகாரமும் தனித்திருந்த மன்னரை சட்டசபை கட்டுப்படுத்தியும், மன்னர் அதைக் கட்டுப்படுத்தியும், சட்டசபை மந்திரிசபையைக் கட்டுப்படுத்தியும், எல்லாவற்றிற்கு மேலாக நீதிமன்றம் எல்லோராலும் புனிதமானதாகக் கருதப்பட்டும் இருந்ததால் தான், ஆங்கில மக்கள் பயமின்றி வாழ்ந்தார்கள் என்று நினைத்தார்.

எனினும்...!

ஆங்கிலேய ஆட்சியில் அக்காலத்தில் எவ்வளவோ குறைபாடுகள் இருந்தன. சட்டசபையில், மேல்சபை பிரபுக்களுடைய பிரத்தியேக பீடமாயிருந்தது. கீழ் சபையிலும் பிரதிநிதிகளாக இருந்தவர்கள் மக்களின் உண்மையான பிரதிநிதிகளல்ல. அக்காலத்தில் சொத்து உடையவர்களுக்குத்தான் ஓட்டுரிமை. பெரிய பிரபுக்கள் தங்கள் பண்ணை கிராமங்களில் தங்கள் பேச்சைக் கேட்டு நடக்கக் கூடியவர்களாகப் பொறுக்கி எடுத்து, அவர்களை மக்கள் பிரதிநிதிகளாகக் கீழ்சபைக்கு அனுப்பி வைத்தார்கள். பெரிய பிரபுக்களெல்லாம் இவ்விதம் ஒவ்வொருவரும் தங்கள் கைக்கூலிகளாக சில சட்டசபை அங்கத்தினர்களை வைத்திருப்பது வழக்கம். சில சமயங்களில் ஜனநடமாட்டமே இல்லாத பாழடைந்த ஒரு கிராமத்திலிருந்து ஒருவர் தேர்ந்தெடுக்கப் படவேண்டியிருக்கும். அந்த கிராமத் தொகுதி ஒரு பிரபுவுக்குச் சொந்தமாயிருக்கும். அவர் யாருடைய தயவு, ஓட்டு இல்லாமலே தனக்குப்பிடித்த ஒருவரை சட்டசபைக்கு அங்கத்தினராக அனுப்புவார்,

மேலும், சட்டம் செய்யவேண்டிய பொறுப்புடைய சட்ட சபையில் மேல்சபையான பிரபுக்களுடைய சபை, சமயா சமயங்களில் நீதிமன்றமாகவும் மாறி, பிரத்தியேக வழக்குகளை விசாரிக்கும் உரிமையும் பெற்றிருந்தது. உதாரணமாக வாரன் ஹேஸ்டிங்ஸ் போன்றவர்கள் இம்மாதிரி மன்றத்திற்குமுன் தான் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள். அதனால், அவ்வளவு கவனமாக நீதிபரிபாலனமும் சட்டமியற்றுதலும் பிரிக்கப்பட்டிருந்தது இங்கிலாந்தில் என்று சொல்ல முடியாது.

இருந்தும், மான்டஸ்க்யூ ஆங்கிலேயரின் ஆட்சி முறையைத்தான் சிறந்ததெனக்கொண்டார்.

அதிகாரப் பிரிவினையால்தான், அரசாங்க அதிகாரிகளின் அத்து மீறிய செய்கைகளை அடக்கமுடியும். அத்துடன், சட்டசபையானது நிர்வாக மந்திரி சபையையும், நீதி நிர்வாகத்தையும் நிதானந் தவறி ஏதுஞ் செய்யாமல் கண்காணிக்க வேண்டும், அதுபோல, சட்டசபையையும் மற்ற இரண்டு வகையினரும் கண்காணித்து வரவேண்டும். மூன்று அதிகாரப் பிரிவுகளும் ஒன்றையொன்று மேற்பார்வை பார்த்துக்கொண்டும், எக்காரணத்தை முன்னிட்டும் மூன்றும் ஒரிடத்தில் குவிந்துவிடாமலும் ஜாக்கிரதையாயிருந்தால் மக்கள் சுதந்தரம் நிலைக்கும்.

இதுதான் அரசியற் கருத்துக்கள் வளர்ச்சிக்கு மான்டஸ்க்யூ செய்த பேருதவி. இதன் பெருமை பிற்காலத்தில், அமெரிக்காவில் குடியேற்ற நாடுகள் புரட்சிசெய்து தாய்நாட்டிலிருந்து பிரிந்து, தமக்கென ஒரு தனி ஆட்சி ஏற்படுத்த அரசியல் சட்டங்கள் நிறுவிய பொழுது, இந்த அதிகாரப் பிரிவினைக் கொள்கையை அடிப்படையாக வைத்துக்கொண்டார்கள் என்பதிலிருந்தே தெரியவரும். அது மட்டுமல்ல; பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் புதிய அரசியல் சட்டங்கள் நிர்ணயஞ் செய்து குடியரசாட்சி ஏற்படுத்தியபொழுது இந்த அதிகாரப் பிரிவினைக் கொள்கையையே வலியுறுத்தி மக்கள் சுதந்தரத்தைக் காப்பாற்ற அது அவசியம் என்று கருதி ஏற்றுக்கொள்ளப் பட்டது.

எதேச்சாதிகார ஆட்சியைக் கண்டு உண்மையிலேயே பயந்து

பி. வி. என். மறைவு

பச்சையப்பன் கல்லூரித் தலைவராக இருந்து பணியாற்றி, பிறகு, காப்புவரி போர்டு, விலை நிர்ணயக் கமிட்டி முதலிய அகில இந்திய பொருளாதாரக் குழுக்களின் தலைவராகவிளங்கிய டாக்டர் பி. வி. **நாராயணசாமி** அவர்கள் ராஜ்கோட்டில், மரணமடைந்த செய்திகேட்டு, வருந்துகிறோம். சிறந்த பொருளாதார அறிஞர், அவர். அத்தகைய ஒருவரின் மறைவு, தென்னகத்துக்கு ஒரு நஷ்டமாகும்.

அதை மிகவும் கண்டித்தார் மான்டெஸ்க்யூ. அவ்வித ஆட்சியில் மக்கள் என்றுமே அச்சத்தில் வாழ வேண்டியிருக்கும். அவர்களுடைய சொத்துக்கள் எப்பொழுது பறிமுதல் செய்யப்படுமோ என்ற கவலையில் மக்கள் தொழில், வணிகம் முதலியத் துறைகளில் ஊக்கத்துடன் இறங்கமாட்டார்கள். அதனால், நாட்டின் செல்வம் பெருகாததுமட்டுமல்ல, நாளடைவில் நசித்துவிடவும் கூடும் என்றார்.

ஒவ்வொரு நாட்டிலும் ஏற்பட்டிருக்கும் அரசாங்கத்தின் தன்மைக்குத் தக்க அரசியல் சட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தால் தான் அரசாங்கம் வெற்றிகரமாயிருக்கமுடியும் என்பது அவர் கருத்து. மன்னராட்சி இருக்குமிடத்தில், பிரபுக்களுடைய செல்வாக்கைக் காப்பாற்றும் சட்டங்கள் இருந்தால்தான், ஆட்சி நல்லவிதமாக அமையும். குடியரசாட்சி இருக்குமிடத்தில் பிரபுக்களுடைய செல்வாக்கைக் காப்பாற்றும் சட்டங்கள் இருந்தால்தான் ஆட்சி நல்லவிதமாக அமையும். குடியரசாட்சி இருக்குமிடத்தில் மக்கள் சிக்கனமாய் இருக்கவும், சமத்துவத்தை வளர்க்கவும், மக்களுக்குள்ளே சமத்துவமாயிருக்க வேண்டுமென்ற விருப்பத்தை அதிகரிக்கவுமான சட்டங்கள் இருக்க வேண்டும். ஒவ்வொரு ஆட்சிக்குத் தக்கவாறு சட்டங்களியற்றி மக்களுக்கு அதற்கேற்ப கல்வியும் புகட்டவேண்டும்.

எந்த ஒரு அரசாங்கமும் தன்னிலேயே கெட்டதோ, நல்லதோ கிடையாது. ஒரு நாட்டுக்கு அல்லது ஒரு சாராருக்குப் பிடித்தமான ஒரு அரசியல்முறை எல்லோருக்கும் பிடித்திருக்காது. ஒரு சூழ்நிலையில் நன்றாக நடக்கும்முறை வேறொரு இடத்தில் பிற சூழ்நிலைகளில் அப்படியே நடக்குமென்ற உறுதி கிடையாது.

ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் ஒரு அடிப்படைத் தத்துவம் இருக்கிறது. உதாரணமாக சமத்துவமும் நல்லெண்ணமும் இருந்தால் தான் குடியரசாட்சி வெற்றியடையும். இல்லாவிட்டால் குடியரசாட்சியேயாயினும், அதில் பொருளாதாரத்தில் நல்ல நிலையிலுள்ளவர்கள். மற்றவர்களை ஜனநாயகத்தின் பேரால் அடக்கி ஆளுவதாகவே முடியும். மன்னராட்சியில் மன்னவன் தன் கவுரவத்தைக் கைவிடக்கூடாது. மக்களுக்குத் தன் கடமையை மறந்து, நாட்டைப் பிறருக்குக் காட்டிக் கொடுக்கும் வகையில் நடந்து தன் கவுரவத்தைக் காற்றில் பறக்கவிட்டுவிட்டால், மன்னன்மேல் நம்பிக்கை குறையும். மக்கள் அவனை எதிர்ப்பார்கள். இம்மாதிரி எந்த அரசாங்கத்தினுடைய அடிப்படைத் தத்துவம் மாறுகிறதோ, அங்கு புரட்சியும் அதன் பயனாக மாற்றமும் ஏற்படும்.

இயற்கை நிலை......

ஒரு நாட்டின் சமூக பொருளாதார அரசியல் நிலைமைகள், அதன் இயற்கைஅமைப்பைப் பொருத்தே இருக்கும். அதுவும் முக்கியமாக சீதோஷ்ணநிலையே அதிகம் பாதிக்கும். ஒரு நாட்டினரின் அறிவு, விருப்பு வெறுப்புகள் அந்நாட்டு சீதோஷ்ண நிலையைப் பொருத்தே இருக்கும். வெப்பமான நாட்டில் வாழும் மக்கள், வேதாந்தம் பேசுபவர்களாகவும், வேலையில் பிரியமில்லாதவர்களாகவும் இருப்பார்கள். குளிர்நாடுகளிலுள்ளவர்கள் எப்பொழுதும் சுறுசுறுப்புள்ளவர்களாகவும் முன்கோபிகளாகவும். இருப்பார்கள் அதனால்தான் அங்கெல்லாம், அதிக நாளைக்கு எதேச்சாதிகார ஆட்சி நீடிக்க அவர்கள் விடுவதில்லை. ஆனால், உஷ்ண நாடுகளில் எளிதில் திருப்தியடைபவர்களாகவும், முன்னேற்றத்தில் அக்கரை இல்லாதவர்களாகவும், எவ்வித ஆட்சிமுறை இருந்தாலும்அதைப்பற்றிக் கவலையின்றியும்வாழ்வார்கள். மலைப்பிரதேசங்களில் வாழுங் குடிகள் சுயேச்சையாகத் திரிந்து வழக்கமாதலாலும், அவர்களை அடக்கி ஆளுவது சாத்தியமல்லவாதலாலும் அவர்கள் எப்பொழுதுமே சுயேச்சையை விரும்பி சுதந்தரமாக வாழ ஆசைப்படுவார்கள். ஆனால், சமவெளிப் பிரதேசத்தில் வளமான இடங்களில் வசிப்பவர்கள், நிலையான அரசாங்கத்தை அது எத்தன்மையாயிருந்தாலும் விரும்பி ஏற்று அதற்கு அடங்கி நடப்பார்கள். பகைவரின் தாக்குதல் அடிக்கடி நேரிடலாம் என்பதால், அவர்கள் பயந்தே வாழ வேண்டிவரும், அதனால், பலமுள்ள மன்னன் இருந்தால் பயமின்றி வாழலாம் எனப் பிரியப்படுவார்கள்.

இம்மாதிரிப் புதிய புதிய கருத்துக்களை வெளியிட்டார் மான்டெஸ்க்யூ. பதினெட்டாவது நூற்றாண்டில், அவருடைய கருத்துக்கள் சிறந்தவைகளாகக் கருதப்பட்டதுடன், அதற்குப் பிறகும் அவைகளை மக்கள் போற்றி வந்திருக்கிறார்கள் என்பதற்கு, மான்டெஸ்க்யூவின் நூல்கள் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன என்பதே போதிய சான்றாகும்.

(தொடரும்)

இங்கிலாந்து மிரள்கிறது, இந்தியாவைக் கண்டு!—என்று எல்லோரும் கூறுகிறார்கள். அந்தளவுக்கு, இங்கிலாந்தில், இந்தியாவின் துணிகள்போய்க் குவிகின்றனவாம். அப்படிக் குவிகின்ற துணி, இந்தியாவில் எங்கிருந்து செல்லுகிறது? இங்கிலாந்திலிருந்துவரும் பணம், இந்தியாவில் எந்த இடத்துக்குப் போகிறது? இமயமுதல் குமரிவரை எல்லா இடங்களுக்கும் அல்ல! பம்பாய்க்குத்தான் அவ்வளவு பெருமையும் வருவாயும்!! இந்திய பருத்திக் கமிட்டியின் விஞ்ஞான லாபரேடரியும் அங்குதான்— ஆலையரசர்கள் ஏராளமாகக் குவிந்து கிடப்பதும் அங்குதான். இதை விளக்கும் ஒரு புள்ளி விபரம்:—

	ஆலைகள்	மக்கள் தொகை	உற்பத்தியாகும் துணி
சென்னை ஆந்திரம் மைசூர் திருவாங்கூர்	79	6 கோடி	115·6 மிலியன் கஜம்
பம்பாய்	190	3 கோடி	2557·8 மிலியன் கஜம்

★ கிளைக் கழகத் தோழர்காள்! ★

★ 27-3-55-ல் புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுங்கள். தேர்தல் முடிவுகளை உடனே 31-ந் தேதிக்குள், தலைமைக் கழகத்துக்கு அனுப்பிவிடுங்கள்.

★ இதற்கென இருக்கும் 'பதிவு சீட்டுகள்' தலைமைக் கழகத்தில், கிடைக்கும். அதில்தான், எழுதி அனுப்ப வேண்டும். இந்தச் சீட்டுகள், வந்து சேர்ந்த கிளைக் கழகங்கள்தான், தலைமைக் கழகத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

★ அப்படித் தேர்தல் நடத்திய கிளைக் கழகம் மட்டுமே மாவட்டக் கழகத் தேர்தலில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படும். முன்பே தேர்தல் நடத்தியாகிவிட்டது என்று இருத்தல் கூடாது.

தேர்தலில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகள்:

1. ஒவ்வொரு சிற்றூரிலும் (சிறிய பஞ்சாயத்து ஊர்—Minor Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக்கொண்ட சிற்றூர்க்கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

2. ஒவ்வொரு பேரூரிலும் (பெரிய பஞ்சாயத்து ஊர்—Major Panchayat) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்ட பேரூர்க்கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு நகரிலும் (நகராட்சிப் பகுதி—Municipality) 25-க்குக் குறையாக உறுப்பினர்களைக் கொண்ட நகரக்கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

4. சென்னையில் உள்ள ஒவ்வொரு வட்டத்திலும் (Division) 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக்கொண்ட வட்டக்கிளை ஒன்றுதான் இருக்கவேண்டும்.

5. சிற்றூர்—பேரூர்—நகரம்—சென்னை வட்டம் ஆகிய கிளைகளின் தேர்தல்கள் நடைபெறும்போது, அந்தந்தக் கிளைகளின் செயலாளர்கள் குறிப்பிடும் ஓரிடத்தில் வந்து, எல்லா உறுப்பினர்களும் கூடவேண்டும். [நகரங்களிலுள்ள வட்டாரங்கள் (Municpal Wards) இப்பொழுது தேர்தல் நடத்தவேண்டியதில்லை. நகரக்கிளை தேர்தல்தான் இப்பொழுது நடைபெற வேண்டும். நகரிலுள்ள எல்லா உறுப்பினர்களும் நகரக் கிளைத் தேர்தலில் ஒருபடியாகக் கலந்துகொள்ள வேண்டும். நகரக்கிளை அமைந்த பிற்பாடு வசதியானபோது 25-க்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டு ஒவ்வொரு வட்டாரமும் (Munici pal Ward) நகரக் கிளைச் செயலாளருக்கு அறிவித்துவிட்டு, நகரக்கிளைச் செயற்குழுவின் மேற்பார்வையிலும், கட்டுப்பாட்டின் கீழும் ஒரு வட்டாரக் கிளையை அமைத்துக்கொண்டு இயங்கலாம்.]

6. ஒவ்வொரு கிளையும் செயலாளர் ஒருவர், துணைச் செயலாளர் ஒருவர், பொருளாளர் ஒருவர் ஆகியோரை அலுவலாளராகத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

7. செயலாளர், துணைச்செயலாளர், பொருளாளர் ஆகியோர் உள்ளிட்ட செயற்குழு 11-பேருக்குக் குறையாமலும், 21 பேருக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

8. சிற்றூர்க் கிளை ஒரு பிரதியையும், பேரூர்க் கிளை ஒரு பிரதிநிதியையும், சென்னை வட்டக் கிளை இரண்டு பிரதிநிதியையும், நகரக்கிளை அந்தந்த நகரமக்கள் தொகையில் ஒவ்வொரு இருபதினாயிரம் மக்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதி வீதமும் அந்தந்த மாவட்டக் கழகத்துக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

9. தேர்தல், கிளைக்கழகத்தின் முன்னைய செயலாளராலேயே நடத்தப்பட வேண்டும். முன்னைய செயலாளரே தேர்தலுக்கு நிற்பதாக இருந்தால், கூடியிருக்கும் பொது உறுப்பினர் கூட்டம், தம்மில் ஒருவரைத் தேர்தல் நடத்துபவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாவட்டக் கழகம் அனுப்பிவைக்கும் தேர்தல் ஆணையாளரின் தலைமையில்தான் வட்டக்கிளைத் தேர்தல் நடைபெற வேண்டும். பிற மாவட்டங்களில் அவசியப்பட்டால் குறிப்பிட்ட கிளைகளின் தேர்தல்களை நடத்திவைக்க, மாவட்டச் செயலாளர், தேர்தல் ஆணையாளர்களை அனுப்பிவைக்கலாம்.

10. தேர்தல் நடைபெறும்போது வாக்குரிமை பற்றிய தகராறுகள் கிளம்புமேயானால், கூடும் கழக உறுப்பினர்கள், அவற்றைக் கூட்டத் தலைவரின் தீர்ப்புக்கு விட முயலல் வேண்டும். அவசியமானால் கூடியுள்ள பெரும்பான்மையோரின் வாக்குகளால் முடிவெடுக்க முயலலாம்.

11 தேர்தல் நாளுக்கு ஒரு வாரத்துக்கு முன்பே, கிளைச் செயலாளர், கழக உறுப்பினர்கள் அனைவரும் அறியும் வகையில் தேர்தல் நடைபெறும் செய்தியையும், தேர்தல் நடைபெறும் இடத்தையும் விளம்பரப்படுத்தி உறுப்பினர் கூட்டம் கூட்டவேண்டும்.

12. தேர்தல் பற்றிய தகராறு இருந்தால் மாவட்டக் கழகத்தின் மூலம்; தலைமைக் கழகத்துக்கு விண்ணப்பம் செய்து நீதி கோரலாம். தலைமைக் கழகம் பிற்பாடு ஆய்ந்தறிந்து தீர்ப்பு கூறும். தேர்தல் நாளன்று தகராறு கிளப்பக்கூடாது.

அண்ணாதுரை
பொதுச்செயலாளர்.

Edited, Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press,
95, Tirukkachinambi St, Kancheepuram.